பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



[வாரப்பதிப்பு]

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4- 0

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1 க்கு அ 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ 2.
தனி விகிதமும் உண்டு

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஸு தை-மீ 10 உ (23—1—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 39.

உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாப்தாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதரூஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதரூஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

அருப்புக்கோட்டை "நாடார் குல மித்திரன்" க்ஷேமநிதிப் பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1வது பிரைஸ் ரூ 3000, 2வது பிரைஸ் ரூ 1500. 3வது பிரைஸ் ரூ 1000. 4வது பிரைஸ் ரூ 500. 5, 6வது பிரைஸ் ரூ 200.

100 ரூபாயில் 5பிரைஸ்களுக்கு ரூ 500. ரூ 50ல் 20க்கு ரூ 1000, ரூ20ல் 50க்கு ரூ 1000. ரூ 10ல் 100க்கு ரூ 1000, ரூ 5ல் 200க்கு ரூ 1000, ரூ 3ல் 600க்கு ரூ 1800, ரூ 2ல் 2400க்கு ரூ 4800 ஆக பிரைஸ் 3381க்கு ரூ 17500, புக 1000க்கு கமிஷன் ரூ 3000, குமாஸ்தா சம்பளம். அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனிப்பிரைஸ் ரூ 1700, பண்டுக்கு ரூ 9000, ஆக ரூ 33000.

1. (4—5—1927) பிரபவஹு சித்திரைமீ 22உ புதன்கிழமையன்று பிரைஸ்கள் எடுக்கப்பெறும்.

2, 33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையாகுமாகில் அவ்வப்படி பண்டுக்கும் சேர்க்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் அவ்வப்படி குறைக்கப்பெறும்.

3. 1வது பிரைஸ் முதல் 6வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4 பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை யனுப்பக்கூடும்.

5 சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ☞ கு. ஆ. முத்துநாடார், பத்திராதிபர். "நாடார் குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் பிட்டு கார்டு எழுதவேண்டும்.

கு. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்,
அருப்புக்கோட்டை.

இனாம்! இனாம்!!

டேபில்-டயம்பீஸ் இனாம்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் கோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனாம் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்ச விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம் :—

தீ பாக்ஸி வாட்ச் அவுஸ்,
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.

மனோஹ்ரீஜாலன்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா வினோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.

எது வேண்டும்?

மணவாழ்க்கையின் மர்மங்கள்	ரூ. 2—4
கர்ப்ப சாஸ்திரம்	1—8
மனோவசிய சாஸ்திரம்	1—8
ரதி சாஸ்திரம்	1—4
ஸ்திரீ புருஷ ரகசியம்	1—0
சதிபதிகளின் மர்மம்	1—0
சரீர மர்ம சாஸ்திரம்	1—0
ரதிமதன சிங்கார ரஹஸ்யம்	1—0
மதனாதி ரஹஸ்யம்	1—0

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை மேது மருந்து விலைப்பட்டியின் சன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை.

S. G. இராமாநுஜலு நாயுடு எழுதிய

பாலிகா கல்பம்

100 போதனைகள் உள்ள 3-ம் பதிப்பு.

பெண்கள் பெரியவர்களாகும்போது அறியவேண்டியவைகளை எளிதில் உதவிக்கிறதே சிறுமியர்கட்குப் புகட்டக் கருத்த உசிதமான கல்வித்துறை. அதற்கேற்ப நன்கு அமைந்த சிறந்த பெரிய குடும்ப ஸம்ரக்ஷணி நூல் இதுவே. இதற்கு இணையேயில்லை. மிகு பயனுள்ளது. 4½ அணா ஸ்டாம்பு அனுப்புக. மூன்று பிரதிகள் வி. பி-ல் அணா 15.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

ரூபாய் 500 இனாம்!

நல்லெண்ணெய்.

சுத்தமான எள்ளு எண்ணெய்க்கு உத்திரவாதம் செய்கிறோம்

மணிலாக்கொட்டை கடலை எண்ணெய் கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணெய் கிடைப்பதோ மிகவும் துர்லபம்.

இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவே தனியாக செக்கு வைத்து நாதோ நேர் கண்பார்வையில் திடமான எள்ளாக வாங்கி சுத்தம் செய்து நல்ல வெல்லம் கலந்து இனிதாக ஆட்டி விற்கிறோம். இதில் ஏதாவது கலப்படம் இருக்கிறதாக நிரூபணம் செய்கிறவர்களுக்கு 500 ரூபாய் இனாம்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

வி. ரங்கசாமி செட்டியார்,
கச்சேரி வீதி, "குடி அரசு" ஆபீசுக்கு
அடுத்த கட்டடம். ஈரோடு.

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்

நம்பிக்கையான வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷாப் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி கம்பெனி.
தபால் பெட்டி 292.
6-99 பவழக்காரத்தெருவு,
சென்னை.

திருநான்மறைவிளக்க ஆராய்ச்சியின் ஆராய்ச்சி.

ஆரியவேத அடிமைகள் நெ. 1

சிவபக்தி அடியார்பக்திகளிற் சிறந்து, நாடோறும் நியமமாக சிவபூசை புரிந்து, சைவநூல்களை நுட்பமாகக் கற்றுணர்ந்து, நடுவு நிலைமையில் நின்று உண்மையை வெளியிடுவதில் தலைசிறந்த திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் இயற்றியுள்ள திருநான்மறை விளக்கமென்னும் ஞானக்கதிரவனை மறைத்துத்தம்பெருமை காட்டுவதற்குப் புறப்பட்ட கார்மேகக்கூட்டங்களே ஆரியவேத அடிமைகள் எனப்படுவர். அவர்கள் யாவருங்கூடிவெளியிட்ட நூலொன்று யான் படிக்க நேர்ந்தது. அந்நூற்குத் திருநான்மறை விளக்கஆராய்ச்சி என்றும் அதனை வெளியிட்டவர் சாம்பசிவம் பிள்ளை என்றுந் தெரிந்தேன். அவர் தாம் வயோதிகராயிருத்தல் போல தமது சொல்லும், பொருளும், வயோதிகத் தன்மை யுடையவாய்ப்பலமற்றனவாயிருத்தலை அறிந்து அவற்றைத் தாங்கிக்கொள்வதற்கு நுண்ணிய ஆராய்ச்சியில்லாத பல ஆரியக்கருத்தினரைக் கூவி அவர்கள் கூக்குரல்களையும் ஒருங்கு சேர்த்து எழுதித் தம் நூன்முகத்தே அவற்றைத் தொகுத்து, வித்வப்பெரியார் அபிப்பிராயமென்று வெளியிட்டிருக்கின்றார். எல்லாம் வாசித்துப் பார்த்தால் "கங்காதரா மாண்டாயோ" என்று அழுத கதைக்கிலக்கியமாகவே அவை காணப்படுகின்றன.

அவ்வித்வப் பெரியாரெனப்படும் ஆரியவேத அடிமைகளுள் மிகவும் துள்ளித் துள்ளிக் கூத்தாடி எங்கள் வேதம் தொலைந்துபோயிற்றே என்று உலைந்து குலைந்து நலிபவராய்த் திருவாளர் பிள்ளையவர்களைத் தமக்குத் தோன்றியவாறு பழித்தலோடு நில்லாது அவர்கள் தம்மைப் பெரியாராக ஒரு காலத்திலே ஒப்புக்கொண்டதாகவும், அப்படியே இன்னும் தம்மைப் பெரிய மேதாவி என்று மதித்துத் தமது குழறுபடைகளையெல்லாம் பொறுத்தல் அவர்கள் கடமை என்றுங்குறித்துத் தமது அறியாமை வடிவுகொண்ட புலமையை வெளிப்படுத்தியவர் யாழ்ப்பாணம் வண்ணைநகர் சுவாமிநாத பண்டிதராவர்.

இவர் எழுதியிருப்பதெல்லாம் பண்டைப் பழங்கதையே. சமஸ்கிருதத்திலே தான் கடவுள் வேதாகமங்களைச் செய்தார் எனவும் அவ்வேதாகமங்கள் இல்லாமற்போனால் சைவசமயமே கிடையாதெனவும், யாக மெல்லாம் சிவபெருமானாலே விதிக்கப்பட்டன எனவும், யாகத்திற் கொல்லப்பட்ட ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறுதலால்யாகத்திற்செய்யுங்கொலைநல்லதே யெனவும், சூத்திராகிய வேளாளருக்குச் சுரத்தோடு வேதம் ஓதுதல் கூடாதெனவும். திருவள்ளுவரும் பிராமணர் தொழிலாகிய யாகத்தையே பெரிதாகப் பேசினரெனவும் நான்கு வருணமும் கடவுளால் விதிக்கப்பட்டனஎனவும் கூறி இக்கொள்வும், அவர்கைகளை ஒப்புக்கொள்ளாதார் நரகமடைவரென அறுதியிட்டுரைத்தனர்.

சரித்திர ஆராய்ச்சி ஒரு சிறிதுமில்லாது பலநாளாகத் தாம் பாராமற்படித்த பாட்டுகளையெல்லாம் தொகுத்து மூட்டைகட்டிக்கொண்டு அம்மூட்டையை விற்று லாபங்கொள்ளலாமென்று முன் வருவதற்கு இதுவா காலம்? இவ்வாரிய அழுக்கு மூட்டையை இவர்தாமே சுமந்துதிரிந்து வாணாள் கழிக்கவேண்டுமே யன்றி அறிவாளர்மாட்டு அவற்றை விற்று விட முயலுதல் எவ்வளவு முழக்கஞ் செய்தாலும் இயலாத காரியமென்பதை இவர் உணர்வாராக. சாமானிய மக்கள் இவர் விற்கும் அழுக்குத் துணிகளாகிய பழங்கருத்துக்களைவாங்கி நோய்க்கிரையாகாதபடி தக்க அறிஞர்கள் தமது பேரறிவுச் சுடரிலே இம்மூட்டையைக் கொளுத்தித் தொலைப்பாராக. இவர் தமது அபிப்பிராயத்தைப் பிள்ளையவர்கள் கண்டித்து ஒதுக்கிவிடுவார்களென்றஞ்சி அவர்கள் அங்ஙனம் செய்து விடக் கூடாதென்று எழுதியுள்ளார். அங்ஙனம் அஞ்சுவது அழுக்குத்துணியைத் தலையில் போட்டுக்கொண்டு வெயிலில் நடக்கிறவர் அது நழுவிவிட்டால் தலையில் வெயில் படுமென்றஞ்சுவது போலாம். உண்மையாராய்ச்சியாகிய கதிரவனது காந்தியின் முன் தலைநீட்ட முடியாத இவர் அப்பொருந்தாதவிஷயங்களைக் கண்டிப்பதைப் பிள்ளையவர்கள் கண்டு மகிழ்ந்தாரென்று சொல்லுவது மிக வியப்பாக விருக்கிறது. இவர் சில ஆண்டுகட்கு முன்னே மாயவரத்தில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் தலைமை வகித்தபோது பெருமை பாராட்டிக் கூத்தாடிய கூத்தாட்டத்தைக் கண்டு யான் என்னும் செருக்கிற்குத் தலைவர் இவரென்பதை உணராதாரில்லை. சபைத்தலைவராயிருந்தும் அமைதியின்றித் தம் வசமிழந்து நின்ற நிலையில் இவருக்குப் பிள்ளையவர்களுக்கும், மற்ற அறிஞரும் சமாதானங் கூறித் தேற்றியிருக்கலாம். அதன் நன்மையைப்போற்றி அடங்க அறியாது பிள்ளையவர்கள் தம்மை பெரியதாகமதித்தாராக எண்ணுதல் எத்துணைத் தவறு என்பதை இவர் அறிந்திலர். அந்தோ பாவம் அது நிற்க,

ஒரு சமயத்திற் குறிய நூல்களிற் கூறியவற்றை குருட்டுத்தனமாகநம்பவேண்டுமென்ற பிரசங்கத்தை இவர் வெளிப்படையாகச் செய்வதே யொழிய இவர் மனதிற்றானும் அக்குருட்டு நம்பிக்கை உண்மையாக நிலைபெற்றிருக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லை என்பதே அறியர்பாலது. சிலவேளைகளில் இவர் பேசிய பேச்சைக் கேட்டவர்கள் இவருக்குக் கடவுள் உண்டென்ற நம்பிக்கைதானும் இருக்கிறதோ என்று சந்தேகிக்கின்றார்கள். திருஞானசம்பந்தர் காலத்திலே தமது கொள்கை பொய்யென்று கண்டும் அவற்றைக் கைவிடாமல் சாதித்த சமணரைப்போல இவரும் தம் கொள்கையைச் சாதிக்கும் மனப்பான்மை யுடையார் போலும். வேதமென்னுஞ் சொல் இன்ன இடங்களில் பொதுப் பொருளில் வழங்கப்பட்டுள்ளது இன்ன இடங்களில் சிறப்பாக வழங்கப்பட்டுள்ளது. இன்ன இடங்களில் அது வடநூலைக் குறிப்பது என்று ஆராய்ச்சி செய்யும் ஆற்றலிலாது பல புலவர்கள் பாடல்களில் வேத மென்னுஞ் சொல்லும் அதன் பரியாயப் பெயர்களும் வழங்கிவரும் சொற்றொடர்களையெல்லாம் தொகுத்துச் சேர்த்துக் கூறியதனால் தமிழில் முதனூல்களில்லை யென்று இவர் எவ்வாறு நிலை நாட்டினவராவர். பிள்ளையவர்கள் நிலைநாட்டியுள்ள உண்மைகளை ஒரு சிறிதும் இவருடைய மேற்கோள்கள் அசைக்க முடியவில்லை. பிள்ளையவர்கள் தமது கருத்திற்கிணங்கத் தேவார திருவாசகங்களைத்திரித்தாரென்பது முழுவதுந்தவறு, சில எழுத்துப்பிழைகளையும், பாடபேதங்களையும் எடுத்துக்காட்டிப் பிரமாதப்படுத்தினமையால் இவர் கருத்து நிரம்புமாறில்லை. உரைகடந்து என்ற சிறந்த பாடத்தை உரைக்கடந்து என்று இவரே திரித்து இலக்கண நயமில்லாது செய்தார் வேதஞ் செய்தவரென்பதை ஏதஞ் செய்தவரென்று பிரித்துப் பொருள் நயத்தைக்கொடுத்தார். இங்ஙனம் இவர் செய்த ஏதங்கள் பல. அவை விரிப்பிற் பெருகும்-

இனி. வடமொழி வேதத்தை யாவது இவர் நேரிலே பார்க்கக் கடவர். அதனுள் அவ்வேதத்தைக் கடவுள் இயற்றினரென்பதற்குப் பிரமாணம் காட்டவே முடியாது. பழமையாகிய ருக்கு வேதத்தை எடுத்துப்பார்த்தால் ஒவ்வொரு சூக்தமும் ஒவ்வொரு இருடியால் செய்யப்பட்டதென்று தெளிவாகக் கூறப்பட்டுளது. அதனுள் அக்கினி, இந்திரன், வருணன், வாயு, மித்திரன், கக்ஷிவான், ரிபுஸ் முதலிய சிறு தெய்வங்களது துதியும், மனிதன், எருமைக் கடா முதலிய எல்லா உயிர்களையும் கொன்று செய்யும் யாகங்களும் சோமபான மென்னும் கட்குடியின் மகிமையும், ஆரியர், தாசர் என்ற இனங்களது போராட்டமும், சிவலிங்க வழிபாட்டினை நிசாசேவ வணக்கமென்று குறிப்பாக இகழும் இகழ்ச்சியும் பார்த்தபின்பாதல் இதற்குப் பொருள் வேறு அதற்குப் பொருள் வேறு என்றுகுழறுது உண்மை இதென்று ஆராயமாட்டாராயின் விவகார ஞானமில்லாத குருட்டு நம்பிக்கையுடையராயிருத்தல் வேண்டும், அல்லது 'தான்பிடித்த முயலுக்கு மூன்றே காலென்று சாதிக்கும் கபடப்பிடிவாத முடையவராயிருத்தல் வேண்டும்இவர் எவ்வாறாயினுமாகுக. ஆங்கிலத்தில் வேதங்களை ஐரோப்பியா மொழி பெயர்த்துக்கொண்டதுபோல தமிழரும் அவற்றை மொழிபெயர்த்துக் கொண்டால் தமிழ்ப் பொதுமக்கள் அவற்றின் உண்மையை உணர்ந்து அவைகள் சிவபெருமான் வாக்கல்ல வென்பதைத் தெளிந்துவிடுவார்கள். அப்போது எத்துணைச்சாமிநாத பண்டிதர்கள் வந்தாலும்! எத்துணைச் சாம்பசிவம்பிள்ளைகள் வந்தாலும் தமிழ்ப் பொதுமக்களைத் தமது குருட்டுநம்பிக்கைப் போதனையால்மிரட்டி ஏமாற்ற முடியாது. இவரே தாம் பதிப்பித்த தேவாரமுகவுரையில்தமிழிலும், ஆதியில் வேதமிருந்ததென்று உறுதியாகக் கூறிவிட்டு இப்போது சாம்பசிவம் பிள்ளைக்குப் பக்கப் பாட்டுப்பாடி முன்னொடு பின் முரணுதல் எக்காரணத்தாலோ தெரியவில்லை. குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குருடும் குருடும் குழிவிழுந்தவாறாக அமைகின்றது, அந்தோ பாவம்!

ஆதலால் தமிழ்ச் செல்வவான்கள் உதவியால் வடமொழி வேதம் விரைவில் தமிழில் மொழி பெயர்க்கப்படவேண்டும்.

தமிழர் யாவரும் சூத்திரரல்லர் என்று சிறுபிள்ளைகளும் எளிதாக அறியத்தக்க இக்காலத்திலே தமிழரில் தலை சிறந்து விளங்கிய வேளாளரையே இப்பண்டிதர் சூத்திரர் என்று குறிப்பிப்பாராயின் இவரது ஒடுங்கிய அறிவு இருந்தவாறென்னே! இவர் போன்றவர்கள் தமிழ்ப் பெருங்கூட்டத்திற்கே இகழ்ச்சியைத்தேடுவாராயின் கடவுளே இவருக்குச் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்குவாராக. வேறு விரித்தெழுதுவதாற் பயனென்? இப்பண்டிதர் திருவாளர் கா.சுப்பிரமணிய பிள்ளை யவர்களுக்குப் புத்திகாட்ட முன் வருதல் தமது அறியாமையையும், வீண் செறுக்கையும், சமயத்திற்குத் தக்கபடி வேடங்கொள்ளும் இயல்பையும் புலப்படுத்தியவாறாகும். இவர் உண்மைச் சைவரெனின் தாழ்வெனுந் தன்மையோடு முரணொழிந்து மெய்ந்நிலையில் நிற்பாராக. இவர் பிள்ளையவர்களுக்குப் பழிபாவங்கள் வாராமல் தடுப்பதற்காகத் தாம் திருநான்மறை விளக்க ஆராய்ச்சிக்கு அபிப்பிராயம் எழுதினதாகக் கூறுகின்றார். சிவனன்பராய் நன்னெறியொழுகும் அவர்கட்குப் பழிபாவங்கள் எவ்வாற்றானும் வாராது; நான்கு முழத்துண்டு உடுத்திக்கொண்டு சைவசமயத்திற்குத் தம் வாணாள் முழுதும் உழைப்பதாகவும் உயிர் விடுவதாகவும் கூறிப்போலியாரவாரங்கள் மிகச்செய்து ஊர்ச்சொத்தைக் கொண்டு நாடோறும் வடைபாயாசத்தோடு வளப்பமாக உண்டு உடல் தழைத்து பூனை கண்மூடிக்கொண்டால் உலகமெல்லாம் கண்மூடிக்கொண்டதாக எண்ணுவதுபோல தமதுமறைச் செயல்கள் சிதம்பரரகசியம் போல் உலகத்தார்க்கு வெளிப்படாதென்றுஎண்ணி பொய்வாதம் தொடுப்பதில் தலை நிற்கும் வேடதாரிகளுக்கே எல்லாப்பழிபாவங்களும் ஏற்பட்டு மீளா நரகத்தையுங் கொடுக்குமென்று இவர் உறுதியாக உணர்ந்து உய்வாராக.

எம். பி. எஸ். வேலாயுதம்

மதுரை 10-வது மகாநாட்டு கூட்டத்தாருக்கு எனது அறிக்கை

(கைவல்ய சாமியார் எழுதுவது.)

உங்கள் கூட்டத்தின் வைபவத்தையும், காரியங்களையும், காரிய நிர்வாகத்தின் பொறுப்புகளையும், காரியத்திற்கு இனிச் செய்யவேண்டிய வேலைகளையும், ஏக மனதாய்ச் செய்த தீர்மானங்களையும், அதை முடிக்கப் பிரபுக்களும், வாலிபர்களும் முன் வந்திருக்கும் உதார குணங்களையும் அமைத்த தலைவர், உபசரணைத் தலைவர், பிரசங்கர்களையும், "குடி அரசி"ல் படிக்கப் படிக்க இனி வருங்காலத்திலுள்ள உயர்வையும்சந்தோஷத்தையும் எதிர்பார்த்திருக்கும் ஒவ்வொருவருக்கும்திருப்தியும் ஆறுதலையுமளிக்கிறது. "குடி அரசை"ப் போன்ற பத்திரிகை உதவியாகஇருப்பது உங்கள் அதிர்ஷ்டமேயாம். அப்பத்திரிகைக்கு உபசரணையும் நன்றியறிதலும் செலுத்துவதோடு நிறுத்தாமல், அதை ஆதரிக்கவும் வேண்டும். நம் எண்ணங்களைப் பரப்பப் பத்திரிகை அவசியமல்லவா? உங்களுக்காக உழைக்க வந்திருக்கும் இந்தப் பத்திரிகைக்கு மூன்று ரூபாய் செலவு செய்வதில் அலட்சியப்பட்டால் நமக்கு எந்தக் காரியம் லட்சியத்தில் முடியும்? அலங்காரத்துடன் மேடையில் உட்காருவதற்கும், நின்று பேசுவதற்கும் நாம் கூடுவதுபோல, பேப்பரை வாங்கிப் படிப்பதற்கும் உற்சாகமுடையவர்களாக இருக்கவேண்டும். "குடி அரசு"க்கு மாதம் 4 அணா கொடுக்க பயப்படாதீர்கள். நீங்கள் கணக்குப் பார்த்தால் இந்த செலவானது உங்கள் மைனர்கள் குடிக்காமலெறியும் சிகரெட்டின் செலவுக்கும், நீங்கள் ருசியில்லையென்று தள்ளும் காபி ஓட்டல் பலகாரத்திற்கும் ஈடாகாது. நம்மில் இங்கிலீஷ் படித்த சிலர் இப்பேர்ப்பட்ட பத்திரிகைகளை அலட்சியப்படுத்திவிட்டு "இந்து," "மெயில்," "ஜஸ்டிஸ்" முதலிய பேப்பரை மேல்வாரியாகப் பார்த்துவிட்டாலே எல்லாந் தெரிந்தவர்களாக நினைக்கிறார்கள், "இந்து" பத்திரிகையோ பார்ப்பனரின் ஆதிக்கம் ஒரு அணுவும் குறையாத சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்பது. டாக்டர் நாயர் காலத்து "மெயில்" பத்திரிகையல்ல; இப்பொழுதிருப்பது. அநேகமாக "மெயிலி"ல் எழுதுகிறவர்கள் பார்ப்பனர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள், "ஜஸ்டிஸ்" உங்கள் பேப்பர்தான். லௌகிக தந்திரமான ஞானம் சிலசமயங்களில் அதற்கு தோன்றுவதில்லை. ஆனால் "குடி அரசு" லௌகிக தந்திரங்களையும், உண்மையையும், தைரியத்தையும் அடிப்படையாக உடையது. பெரிய மனிதர்கள் உதவியே பெரிதென நினைத்து லௌகிக விவகாரங்கள் தெரிந்த தைரியசாலிகளை அலட்சியப்படுத்தினதினால் தேர்தலில் அநேகர்கள் தோற்றார்கள் என்பதிலும் அர்த்தமிருக்கிறது. "குடி அரசு" பத்திராதிபருக்கு பத்திரிகையில் லாபம் வந்து தீரவேண்டுமென்றில்லாவிட்டாலும், பத்திரிகையை நடத்தவும், எண்ணங்களைப் பரப்பவும், சந்தாவும் பணமும் அவசியமென்பது எல்லோருக்குந் தெரியும். சங்கத் தலைவர்களான நாயர், செட்டியார் இவர்களின் தியாகமே சங்கத்துக்குப் பெருமையும் லாபமுமாக இருந்தது. இப்பொழுது யாதவரினும் பின் வாங்காமல் அல்ப ஆசைகளையும் பெருமைகளையும் விட்டு ஒரு புதிய சந்ததியை உண்டுபண்ண எளியவர்களிடம் இரக்கம், அவர்களது பசித்த வயிற்றுக்கு ஆகாரம், பொதுஜனங்களுக்கு அறிவை அளித்தல், இவைகளைக் கொண்டுவருவதற்கும், நம் நாட்டு முன்னோர்களுடைய கொடுமையினால் மிருகப் பிராயத்திற்கு வந்திருக்கப் பட்டவர்களை மனிதராக்குவதற்கும் தடித்துப் பேயிருக்கும் மூடக்கொள்கைகளைத் தொலைப்பதற்கும், தைரியமாய் முயற்சி செய்யச் சுயநலமற்று யோக்கியமாயுள்ள எத்தனை பத்திரிகை இருக்கிறது, எத்தனை மனிதர்கள் இருக்கிறார்கள்? என்பதற்கு உங்கள் சங்கம் பதில் சொல்லவேண்டும். உங்கள் சபையின் தீர்மான எண்ணங்களைப் பரவச் செய்யுங்கள். நிச்சயம் பண்ணின ஏற்பாட்டின்படி வேலை செய்யுங்கள். பெயரின் பொருட்டாவது, கீர்த்தியின் பொருட்டாவது, இவை போன்ற எந்த மூடத்தனத்தின் பொருட்டாவது பின் திரும்பிப் பார்க்காதீர்கள். உங்கள் ஜெயத்தினால் கர்வமடைந்து அலட்சிய வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள். தங்கள் ஜீவிய காலமெல்லாம் அற்ப விஷயங்களைப் பேசிக்கொண்டும் தன்னைப்பற்றியே பெருமைப்படுத்திக்கொண்டுமிருக்கும் ஞாயமில்லாப் பேச்சாளிகளை கோபிக்காதீர்கள். அதைப்பற்றி கவலையுமெடுத்துக்கொள்ளாதீர்கள். அவர்களே உங்கள் வழிக்குத் திரும்புகிறவரை பொறுமையாக இருங்கள். தங்களைப் படித்தவர்களென்று நினைத்துக்கொண்டு ஐரோப்பியர்களுடைய புத்தி சக்தியின் சிந்தித்திடக்கிற சிற்றறிவைத் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு தன்னால் ஒருமுயற்சியும் செய்யப்படாத சிலரைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். ஆனால் உங்கள் அபிவிருத்திக்குத் தடையாகவிருக்கும் புரோகிதர்களை நீக்க சபை தீர்மானம் செய்ததுபோல் இவர்களையும் வெறுத்துத் தள்ளுங்கள். புரோகிதன் இல்லாவிட்டால் இகலோக பரலோக சுகமில்லை என்னும் உபதேசத்திலுள்ள பயத்தை விசாரணையினால் தீர்த்துக்கொள்ளுங்கள். புரோகிதர்களில் உயர்ந்தவர் வசிஷ்டர். வசிஷ்டர் புரோகிதம் செய்த குடும்பங்களே ஒரு நாளாவது கவலையைவிட்டு இருந்ததில்லை. அவைகள் எல்லாம் இப்போது எங்கேயோ பறந்துவிட்டன. பெண்களுக்கு இதை விபரமாக எடுத்துச் சொல்லுங்கள். "நாங்கள் என்ன செய்வோம்? பெண்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன்" என்கிறார்கள் என்று பெருமையாகப் பேசி முண்டைச்சியைப் போல் தலையை ஆட்டுகிறவர்களை, சொல்லுவது போல் செய்யாவிட்டால் சத்துரு மதிக்கமாட்டானே என்று சொல்லுங்கள். பார்ப்பானைக் குற்றம் சொல்லுவதுபோல் நம் குற்றத்தை நாமும் விடவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உங்கள் சகோதரர்களிடையே தலைமை வகிக்க முயற்சிக்காதீர்கள். அவர்களுக்கு ஊழியஞ் செய்யுங்கள். தலைமை வகிக்கவேண்டுமென்ற முட்டாள்தனம் எத்தனையோ பேரின் அறிவையும் முயற்சியையும் வீணாக்கிவிட்டதென்பதை உணருங்கள். உங்கள் கைக்குள் பொது ஜனங்களை கொண்டுவர வீடுவீடாக வேலை செய்யுங்கள். "குடி அரசு" பத்திரிகையை வீடு வீடாய் செலுத்துங்கள். ஆரம்பம் சிறியதாயிருப்பதைப்பற்றி பயப்படாதீர்கள். பெருங்காரியம் பின்னால் வருகின்றன வென்பதைத் தெரிந்து தைரியம் கொள்ளுங்கள். உங்கள் மேல் பாய்வதற்கு வரும் பாவிகளை அன்பால் அணையுங்கள். எப்பொழுதும் வேலையின் பலன் உடனே கைகூடாது. வேலை மெதுவாகத்தான் பரவும். வேலை செய்வதில் திருப்தியாக இருங்கள். மூடர்கள் முட்டாள் தனமாகப் பேசட்டும், சத்துருக்கள் கொடுமை செய்யட்டும், தூற்றட்டும் ஆனால் சத்திய வார்த்தை ஒருபோதும் வீண்போகாது. அநேக யுகங்களாக அது குப்பையினால் மூடப்பட்டிருக்கலாம். அது தானாகவே இப்பொழுதோ, பின்னாலோ வெளிவந்துவிடும். சத்தியம் அழிவற்றது. நற்குணம் அழிவற்றது. பரிசுத்தம் அழிவற்றது. அறிவீனத்திலும் வறுமையிலும் எப்பொழுதும் மூழ்கியிருக்கும் ஜனங்களுக்கு இரங்குங்கள். அவர்கட்கு வழி காண்பியுங்கள். இதைவிடக் கடவுள் கைங்கரியம் வேறொன்றில்லை. நீங்கள் ஒரே சங்கத்தின்கீழ் இருக்கிறீர்கள். ஆனால் ஒரே பொறுப்பின் கீழில்லை. எனவே உங்கள்ஒற்றுமை புறத்தோற்றமே ஒழிய அது உங்கள் பொறுப்புகளை ஒன்றாய்ச் சேர்க்கவில்லை. உங்களை ஒரு வரிசையாக நிறுத்தி வைத்து எங்கேனும் லேசாக அடிவிழுந்தால் ஒருவர்மேல் ஒருவர் முட்டுகிறீர்கள். அந்த ஐக்கியம் உயர்வுடையதன்று. விழித்துக்கொண்டு ஒரே பாதையில் நடக்கும் மனிதனின் ஒற்றுமை போன்ற ஒற்றுமை ஒரே தரையின்மீது தூங்குவோன்மாதிரி ஒற்றுமை இந்த ஒற்றுமையில் கர்வம் கொண்டு பெருமை பேச இடமில்லை. ஒன்று கூடி ஸ்தோத்திரப்பாட்டுகள் பாடவும், ஒன்று கூடி தலைகுனியவும் இடங்கொடுக்கும். உங்களை உயர்த்தாது என்பதை படித்தவர்களான நீங்கள் உணருங்கள். நீங்கள் மனிதனுக்கும் கற்பனை நூல்களுக்கும், சைகைகளுக்கும், எல்லைகளுக்கும், கற்பனைத் தடைகளுக்கும் தலைகுனிவது தலைமுறை தலைமுறையாய் வழக்கமாய்விட்டபடியால் எந்தத் துறையிலும் நாமாக ஒன்றுசெய்ய முடியும் என்கிற உண்மை உங்கள் முன் நின்றாலும் நமக்குத் தோன்றினாலும் மேனாட்டு நாகரீகக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தாலும் உங்கள் கண்ணுக்குத் தெரியாமல் தெளிவைக் கொடுத்து மறைப்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமானால் உங்கள் அலங்காரங்களையும் உங்கள் வாழ்க்கையின் சந்தோஷத்திற்கு நீங்கள் நிச்சயித்துக்கொண்டுபோகும் வழிகளையும் உங்கள் பெருமைகளையும் கொல்லையிலெறிந்துவிட்டு உங்கள் விசாரத்தால் உண்டாகும் விவேகத்தின் அறிவை நிச்சயப்படுத்துங்கள். கண்ணாடி மூடிக்குள் தண்ணீர்விட்டு அதில் வளர்க்கப்பட்ட பொன்னிற மீன்கள் கண்ணாடியை தண்ணீரென்று நினைத்து அதில் வந்து மோதிமோதி கடைசியாக ஒரு குறிப்பிட்ட சுற்றளவுக்குள்ளாகவே சுற்றி பிறகு அதை பெரிய தொட்டியில் கொண்டுபோய் போட்டாலும் தண்ணீரை கண்ணாடியென்று நினைத்துப் பயந்து பழைய மூடி எல்லைக்குள்ளே சுற்றுமாம். அதுபோல கற்பனை வசனங்களாலும், பழமொழிகளாலும் பிரயோஜனமற்ற கிரியை சடங்குகளாலும் தேகமும், புத்தியுங் கட்டுப்பட்டிருந்த நீங்கள், சாஸ்திரம் பொதுவென்று பாவியிருக்குமிந்தக்காலத்தில் சாமர்த்தியசாலிக்குச் சமஉரிமையாக வருமிந்தக்காலத்தில்—மதப் புரட்டெல்லாம் ஞாய சாஸ்திரப் பிரத்தியட்சப் பிரமாணத்தால் அடிபடுமிந்தக்காலத்தில்—தலை உடைந்து போமோ என்று உங்கள் எலும்புக்குள் ஊறிக் கிடக்கும் பயத்தை வைத்துக்கொண்டிருப்பதில் என்ன அலங்காரமிருக்கிறதென்பதை உணருங்கள். குரூர சுவாபமுடைய உங்களுடைய வைதீகர்கள் பொய்க்கொள்கையினால் அநேக பயங்கர கதைகளை உண்டுபண்ணி ஜன சமூகத்தின் கால்களையும், கைகளையும் கட்டிப்போட்டு அடிமேல் அடியாக அடித்து அழுத்திவைப்பதை நீங்கள் உணருங்கள். ஆனால் இது ஒருநாள் வேலையல்ல. பாதைகளும் கரடுமுரடானது. நீங்கள் ஜெயமடையாது மரிக்கலாம். இன்னொருவர் அந்த வேலையை எடுத்துக்கொள்வார்கள். உங்கள் கூட்டத்தில் நிறைந்து கிடக்கும் துன்பக்குவியலுக்கு நெருப்பு வையுங்கள். அது பற்றி எரிந்தே தீரும். "ஏ பார்த்தா! நீ வேலைசெய்; பலனைப்பற்றி கவனியாதே. தன் கடமையைத் தெரிந்து தொழில் செய்கிறவன் கீர்த்தியை அடைகிறான்" என்று பகவான் சொன்னதை உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். உங்கள் கட்சியினால் நன்மையடைந்து உங்கள் கட்சிக்கு யாதொரு உதவியும் செய்யாமல் தங்கள் வாழ்க்கையே பெரிதென நினைத்து குற்றம் சொல்லிக்கொண்டிருக்கும் துரோகிகளைச் சபிக்காமல் நாம் உண்மை

பாளையங்கோட்டை ஆதிதிராவிடர் மகாநாட்டில் ஸ்ரீமான் ஆர். வீரையன் அவர்களின் தலைமைப் பிரசங்கம்.

சகோதரர் சகோதரிகளே!

[illegible] நாட்டிற்கு [illegible] தலைமை [illegible] மகாநாட்டின் [illegible] இருக்க [illegible] [illegible] செய்யும் உத்தமர்களின் [illegible]

யாகவிருந்து கடைசி வரையிலும் பரிசுத்தமாயும் அன்பு மிகுந்தவராயும் இருந்தால் எல்லாக் காரியங்களும் வந்து குவிந்துவிடும்.

பார்ப்பான் உயர்வடைவதற்கு கல்வியே காரணம். காரிய சாத்தியத்திற்கு வேண்டிய தந்திரம், அதை முடிக்கச் சகிப்பும், லௌகீக தந்திரமும் உடையவன் பார்ப்பான். பின்னால் உண்டாகும் நன்மையையும் காரியத்தையும் அவர்கள் ஆலோசிப்பவர்கள். அதனால்தான் சிறு வேலைகளையும் சிறு சம்பளத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதை நம் வாலிபர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். பார்ப்பனப் பையன்கள் படிப்புத்தீர்ந்து உத்தியோகமடைந்து தங்கள் தங்கள் உத்தியோகத்திற்குத் தகுந்தபடியும் இடத்திற்குத் தகுந்தபடியும் தங்களை மாற்றிக் கொள்ளுகிறார்கள். நம் பாலியர்கள் படிப்பு முடிவதற்குள் மயிர்வெட்டும் தலைசீவுதலும்; சிகரெட்டு குடியும், டை பூட்சும், அலங்காரம் பண்ணுவதிலே காலத்தைப்போக்கி புத்திக்கு உலக அறிவின் வாட்டமில்லாமல் செய்து கொள்ளுகிறார்கள். இதை நீங்கள் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். நம் வாலிபர்களுக்கும் பெண்களுக்கும் இங்கிலீஷ் நாகரீகத்திலுள்ள பிரமையை ஒழிக்கவேண்டும். “மகாத்மா சொன்ன கதரேதான் இதற்கு மருந்து. இந்த மருந்தினால்தான் ‘பிரமை வியாதி’ தொலையும். ஆனதால் அகமும் புறமும் ஒத்துக் கதரே கட்ட வேண்டும். உலகமெல்லாம் மதிக்கப்பட்ட மகானின் வார்த்தையை நாம் மதித்து நடக்கவிட்டால் நம்மால் எந்தக்காரியத்தைச் செய்ய முடியும்? நம்மை யார் மதிப்பார்? எல்லாவிதத்திலும் உயர்ந்த அமெரிக்கா அவர்களே தங்களுக்கு நல்ல அபிப்பிராயம் சொல்லும்படியாய் அனுப்பப்பட்டவரல்லவா மகாத்மா காந்தி? அவர் வார்த்தையை நாம் அலட்சியம் செய்து விட்டால் என்றும் நம் துன்பம் தீராது. ஆகையால் மதுரை மகாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்! நிறைவேற்றுங்கள்!! நிறைவேற்றுங்கள்!!!

[illegible] நிலைமை [illegible] சக்தோசமில்லை.

உங்கள் [illegible]

இந்த ஜில்லாவின் மொத்தம் 19,00,900 ஜனத்தொகை இருக்கிறது. இதில் 3,22,411 பேர் தொடக்கூடாத வகுப்பினர் [illegible] இவர்களில் [illegible] 5431 ஆண்களும் பெண்களுமாக [illegible] இது [illegible] கணக்கின் [illegible] இருக்கிறது. [illegible] பள்ளிக்கூடத்திற்கு [illegible] இந்த [illegible] நாம் [illegible] வேண்டும்.

கஷ்ட நிவர்த்தி.

[illegible] கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டுமானால் [illegible] ஆராதனை, [illegible] விளக்கல், உண்மை உரைதல், [illegible] நடவடிக்கைகள் ஆகிய இவ்விதமான [illegible] நாம் [illegible] செய்யவேண்டும். [illegible] வேண்டிய [illegible] பூமியும் [illegible] ஜலவசதியும், [illegible] வசதியும், [illegible] சங்கங்களும், [illegible] நாம் [illegible] அடையலாம்.

ஜாதி வித்தியாசம்.

ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு தன்மை ஏற்படுகிறது. அது நாளேற முற்றிலும் ஜாதியாக மாறிவிட்டது. ஆகையால் சுமார் நமது தேசத்து 7 கோடி ஜனங்களும் ஜாதி வித்தியாசக்கொடுமையால் தொடக்கூடாதவர்களாகவும், நெருங்கக்கூடாதவர்களாயும், பாவிக்கப்பட்டு உயிருடனே தேக்கொடுத்து விட்டவர்களுக்குண்டான வேதனையை அடைந்தவர்களாக இருக்கிறார்கள். ஜப்பான் தேசத்தில் ஜாதி வித்தியாசக்கொடுமையை எவ்விதமாக ஒழித்தார்களோ அவ்விதமே இந்திய தேசத்திலும் பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டென ஏற்படுத்திக்கொண்ட ஜாதி வித்தியாசத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். இதனால் [illegible] மனம் கரும்புகிறதோ அக்கறையுள்ள சுமார் 7 கோடி ஜனங்களையும் நீண்டநாள் தொலைக் கருதப்படுகிறவர்களுக்கு விமோசனமுண்டாகும்.

எதிர்கால மாறுதல்கள்.

இந்த தேசத்தில் பல வருடங்களுக்கு முன் மனிதர்களை ஆடுமாடுகளைப்போல் அடிமைகளாக விற்று வாங்கி வந்ததாக வாசித்தும் கேட்டுமிருக்கலாம். அடிமை வியாபாரம் இந்தியன் பீனல்கோடில் ஆக்ஷேப அரசாங்கம் தலைக்கப்பட்டபின் சட்டத்தால் கண்டித்துத் தடுக்கப்பட்டது. கடைசி

யாக 1917 வருஷம் 26—27 [illegible] [illegible] [illegible] [illegible] இல்லை. [illegible] நம் [illegible] [illegible] [illegible] ஒரு [illegible] மாத்திரம் நான் [illegible] [illegible] இடத்தில் அவர்களின் [illegible] [illegible] பண்ணைக் [illegible] [illegible] [illegible] அந்தக் கொட்டிமேலே மண்ணைப்போட்டு மூடிவிட வேண்டும். தற்போது இவைகளெல்லாம் மறைந்துவிட்டது [illegible] பார்கள் அனுதாபம் காட்டிக்கொண்டு வருவதால் நாம் மிக்க சந்தோஷப்படவேண்டியதாயிருக்கிறது. மேலே குறிப்பிட்ட முதல் சிப்பத்தின் வேகமானது தற்போதும் கூட பல கிராமங்களில் இண்டப்படாதவர்கள் முழங்காலுக்குமேல் தான் உடை தரிக்கவேண்டுமென்றும், மற்ற இனத்தவர்களுடன் சமபாவத்தோடும் பொழுது வாயின் ஓரத்தில் கையைவைத்துக் கொஞ்சம் முதுகை மாதிரியாக “புத்தி புத்தி” என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் சொல்லிக்கொண்டு பேச வேண்டுமென்றும், காலில் பாதரக்ஷை அணியக்கூடாதென்றும், கையில் குடைபிடிக்கக் கூடாதென்றும், வண்டிகளில் ஏறக்கூடாதென்றும், குளம், கிணறு, கோவில், பொது இடங்கள் இவைகளுக்குச் சமீபத்தில் நெருங்கக்கூடாதென்றும், கட்டுதிட்டம் இருந்து கொண்டு வருவதை நேரில்போய் சுற்றிப்பார்த்தால் தெரியவரும். நமது சுய முயற்சியால் செல்வாக்குள்ளவர்களாகவும் பலவித உத்தியோகப்பதவிகளையும், காலாவதியில் அடையப்பெற்றால் இத்தகைய கஷ்டங்களிலிருந்து விமோசனம் உண்டாகுமென்பது எனது நம்பிக்கை.

சமூகச் சீர்திருத்தம்.

கல்யாண காலங்களில் பத்து முதல் பதினைந்து நாட்கள் நடக்கும் தருணத்தில் [illegible] [illegible] பெற்றுக்கொள்ளும் குறிப்பிட்ட தொகையை மீன் செலவு அப்பொழுதே செய்துவிடாமல் அந்த சமூகச்சீர்திருத்த நிதியத்தில் பொதுவாக நம்பிக்கையுள்ள முக்கியஸ்தரான ஒருவரிடத்தில் சேர்த்து அதைவிருத்தி செய்யவேண்டும். அதோடு கூட வாரம் ஒன்றுக்கோ மாதம் ஒன்றுக்கோ ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பண்டியில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேமமாயும் ஒழுங்காயும் சேகரஞ்செய்து மூலதன

வியத்தைச்சம்பாதிக்க வலைவைத்துக்கொள்ளல வேண்டும்; சுயநலம் பெருமை இவைகளை விரும்பாமல் சமூகமுன்னேற்றம் என்கிற நோக்கத்தில் தளராமல் வேலைசெய்ய வேண்டும் இதற்கு மாறாக நடந்துகொண்டால் காரியம் நிலைகுலைந்து போய்விடும். பலவித பண்டிகை தினங்களிலும் வீடுவீடாய்ச் சென்று தானியத்தையும் பொருளையும் சேகரம்செய்து மூலதனம் இவ்விதத்திலும் சேர்த்துக்கொள்ளப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

முடிவுரை.

உங்களுக்கு முடிவாகச்சொல்லுவதாவது உங்கள மீட்பு அல்லது தாழ்வு உங்கள் கையிலே இருக்கிறது. உயர்ந்த எண்ணமும், பெரியமனதும், கௌரவ நடத்தையும், வீரகுணமும, உறுதியான எண்ணமும், உள்ளவர்களாக முயல்வீர்களேயானால் அதற்கேற்றபடி உங்களின் நிலைமையும் மேன்மை அடையும். தன்னை பேகேவலமாக நினைத்தல் சொந்தவகுப்பாரை பிறர் முன்னிலையில் அவமதித்தல் அற்பநினைவு, பொறாமை, கோழைத்தனம் முதலிய அருவருக்கத்தக்க குணங்களையும் நடக்கையும உங்களை கேவலமாக்கிவிடும். ஏனெனில் நம்பிக்கையற்ற ஓர் மரபினர்-சுயமரியாதைகளைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத ஓர் மரபினர் இந்தககாலத்தில் நிலைத்து நிற்கமுடியாது.

முக்கியமாக ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்லுகிறேன். அதாவது நாம் பலவிதத்திலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த கஷ்டகாலத்தைப்போல் அறிவை உண்டாக்கும்படியாபு வேறெதுவுமில்லை இதை நன்றாய் எப்பொழுதும் உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இக்கஷ்டகாலத்திலிருந்து தற்போது விடுதலை அடையாவிடில் நாம் உயிரோடு இருப்பதைவிட இன்றே சுத்த வீரர்களாக அடியோடு அழிந்துபோவது நல்லது. இன்றையிலிருந்தே உங்களுக்கு பலத்த புதிய உணர்ச்சிதோன்றி நமது முதியோர் சொல்லிய தெய்வ வாக்கைப் பின்பற்றி நடகதால் கடவுள் நமது ஊக்கத்தில் கருணை புரிதாராக.

உடுமலைப்பேட்டை லோக்கல் கோவாபரேடிவ் யூனியன் (லிமிடெட்)

வருஷாந்தர மஹாசபைக் கூட்ட அறிக்கை.

ஷை யூனியன் வருஷாந்தரக் கூட்டம் 1927 வருஷம் ஜனவரி மாதம் 30-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு உடுமலைப்பேட்டை முனிசிபல் ஹைஸ்கூலில் நடைபெற உறுதி செய்திருப்பதால் தங்கள் சங்கத்து யூனியன் பிரதிநிதி பஞ்சாயத்தார்கள் சகிதம் வந்திருந்து நடத்திவைக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறது என காரியதரிசி ஸ்ரீமான் ஏ. ஆர். குருமூர்த்தி நாயுடு அறிவிக்கிறார்.

திருவையாற்றுப் பார்ப்பனர்களின் அக்கிரமம் அழிந்தொழிந்தது.

சென்றவாண்டு செட்டுமுக இவ்வூரில் புஷ்ய மண்டபத்துறையில் சிங்கப்பூர் சுவாமிகளைச் சமாதி செய்த விஷயமாக, சமாதி செய்தது சுவரொன்று வெளிப்படையாகவும், பார்ப்பனச் சமாதி இருக்குமிடத்தில் அதற்குச் சமதையாகச் சூத்திரரைச் சமாதி வைத்துவிட்டார்களே என்ற பொறாமையை உட்கிடையாகவுங் கொண்டு, சமாதியைப் பேர்த்தெறிக்காலன்றி ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி ஷை துறைக்குத் தீர்த்தங் கொடுக்கப் போகலாகாதென்று பொறாமையும் ஜாதித் துவேஷமுமே குடிகொண்ட சில பென்ஷன்தாரர்களும், மானேஜர்களும் வக்கீல்களும், ஆசிரியரும் ஆகிய பார்ப்பனப் படுமோசக்காரர்களிற் சிலர் இதே வேலையாக இராப்பகல் உழன்று தடையுத்தரவு பிறப்பித்தனர். இது விஷயத்தில் வேதாகமாதி நன்னெறியை உலகத்திலே நிலைநிறுத்தவந்த அவதார புருஷர்களெனச் சொல்லிக்கொண்டு—சந்தியாவந்தன மந்திரமே இருந்ததொரு தலைமுறையிலுங்கூட வயிற்றைப் பிளந்து பார்த்தாலும் காணற்கரிய நிலையிலுள்ள உலகமே தெரியாத சில வைதீகப் பிராமணர்களும், பிராமணார்த்தமும் சத்திரச் சோறுமே சாசுவத ஜீவனமாகக்கொண்டு தின்று கொழுத்து வாய் கொழுத்து ஊர் வம்பை விலைக்கு வாங்கிப்பேசி தன்னிலை பிறர்நிலையறியாது தலைதடுமாறி ராஜீய ஞானிகளெனத் தம்மைத் தாமே மதித்த சில தான்தோன்றிப் பார்ப்பனர்களும் சகலாகம பண்டிதரெனத்தானே கனவு காண்பவரும், சமாதி செய்தபின்னர் அங்குபிணங்கிடக்கின்றது. சுவாமி போகலாகாதென்பவரும் மாதாகோவிலின்ஈசான மூலையிலுள்ள பலருமறிந்த சமாதியினை, அது சமாதியல்ல வேடிக்கைக்காகக் கட்டிவைத்திருக்கிறது என்பவரும், கோவிலிலுள்ள புஷ்கரணியில் தீர்த்தங்கொடுக்கலாமென முதலிற் கூறிப் பின் புஷ்கரணியில் தீர்த்தங்கொடுக்க விதியில்லையென்று முன்னுக்குப் பின் முரணாக மதிபிறழ்ந்துரைக்கும் ஸ்ரீ கணபதிக் குருக்களவர்களை யுள்ளிட்ட சிலரும் ஆகிய இவர்கள்தான் பல்வகையாகப் பிதற்றிக்கொண்டு இறுமாந்து திரிந்து மிகவும் ஒற்றுமையுடனிருந்த ஊரை இரண்டுபடுத்தி உலகம் பழிக்கும் ஓர் பெரும்பழியைத் தேடிக்கொண்டார்கள் என்றாலும் தற்காலம் தஞ்சை டவுன் மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கும் பார்ப்பனரல்லாத ஸ்ரீமான் நம்பியாரவர்களும் காங்கிரஸ் வாதியாகிய ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியாரவர்களும் இதிலீடுபட்டிருந்ததே யாவரும் வருந்தத்தக்கதாகும். இனிமேலாயினும் இந்தக் கனவான்கள் தன்னலமொன்றையே கருதும் பார்ப்பனர்களின் மாயவலையில் சிக்காமலிருக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக,

இங்ஙனமாக இறுதியாக இடப்பட்ட தடையுத்தரவின் காலமுங் கடந்தது. தடையுத்தரவு பிறப்பிக்கக் காரணமாகக் காட்டிவந்த ஷை மடத்திற்கு அயல்வீட்டிலிருந்த சிவராவ் என்பவரால் தொடரப்பட்ட சிவில் வழக்கும் தள்ளுபடியாயது அப்பொழுது ஊரிலுள்ள பலரும் சங்கராந்தி புண்ணிய காலத்திலாவது சுவாமி புஷ்ய மண்டபத்துறையில் சென்று தீர்த்தங்கொடுக்கச் செய்ய வேண்டுமென்று விரும்பியதன்மேல் தற்காலம் கட்டளையாகவிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்திரத் தம்பிரான் சுவாமிகள் தானே ஷை முயற்சியைக் கைக்கொண்டு தஞ்சை வக்கீல் ஸ்ரீமான் சீனிவாச ஐயரவர்களைக் கொண்டு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அவர்களிடம் மனுசெய்துகொள்ள, கலக்டரவர்கள் உத்திரவின்பேரில் ரிசர்வ் போலீசாருடன் டிஸ்டிரிக்ட் சூப்பரிண்டெண்ட் அவர்களும, டிப்டி சூப்பரிண்டெண்ட் அவர்களும் பந்தோபஸ்துக்காக 13—1—27-௳ மாலை 5 மணிக்கு இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். இதைக்கண்ட மேற்கூறிய பார்ப்பனர்கள் சுவாமி புஷ்ய மண்டபத் துறைக்குச் செல்வது சாஸ்திர விரோதமென்றும், ஒரு பார்ப்பனராவது அங்கு ஸ்நானம் செய்ய இயலாமற் போகுமென்றும் பலவாறு சொல்லிக்கொண்டிருந்த சமயம் தர்மத்தையே உலகத்தில் நிலைநிறுத்தத் தோன்றிய அவதார புருஷர்களில் ஒருவரான வக்கீல் எஸ். வெங்கட்டராமய்யரவர்கள் மிகவும் அவசரமாக ஓடோடியும் வந்து கலெக்டரவர்களிடம் இரண்டு நாள் தாமதஞ் செய்தால் சிவில் மூலமாக தடையுத்தரவு வாங்கிவிடுவதாகப் பகீரதப் பிரயத்தனஞ் செய்து தலைகீழ் நின்று பார்த்தும் ஜபம் ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியாக டிப்டி கலெக்டரவர்கள் 14-1-27௳ சுவாமிபுறப்பட்டுச் சென்று தீர்த்தங்கொடுப்பதை யாரும் தடைசெய்யலாகாதென்றும தடைசெய்தால் அரஸ்டு செய்யப்படுவார்களென்றும உத்திரவு பிறப்பித்தார். பின்னர் (13-1-27) அன்றிரவு 4 மணிக்கு சுவாமிபுறப்பட்டது அப்பொழுது அன்பர்கள் அனைவரும தன்னையறியாது பேருவகையுடன் உச்சிமேற்கை கூப்பி கண்களினின்றும ஆனந்த வருவிபொழிய ஹர! ஹர!! வென்ற பேரொலிசெய்து சுவாமியுடன் சென்ற காட்சி இதுவரையும் என்றுங்காணாதகாட்சியாக இருந்தது. இங்ஙனமாக சுவாமி புஷ்யமண்டபத் துறைக்குச் சென்று தீர்த்தங் கொடுத்தது. அப்பொழுது பார்ப்பனர்களும் அல்லாதார்களும் மிகவும் உவகையோடு நீண்ட நாட்களாகக் கிடைக்காத காட்சி கிடைத்ததென ஸ்நானம் செய்த காட்சியை டிப்டி கலெக்டரவர்களும், டிஸ்டிரிக்ட் டிப்டி சூப்ரெண்டெண்ட் அவர்களும், சர்க்கில் இன்ஸ்பெக்டர் அவர்களும் "புஷ்யமண்டபத்துறையில் சுவாமி தீர்த்தங் கொடுத்தால் ஒரு பார்ப்பனருஞ் செல்லமாட்டார்கள்" என்று கூறிய சொல் உண்மைக்கு முற்றிலும் மாறானதெனக்கண்டு கொண்டார்கள். இங்ஙனமாக யாதொரு இடையூறுமின்றி நிறைவேறிய இவ்வைபவத்திற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட இவ்வூர் சப் மாஜிஸ்திரேட் அவர்களுக்கும், சர்க்கில் இன்ஸ்பெக்டரவர்கட்கும், யூனியன் போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் எஸ். பொன்னுசாமி பிள்ளை அவர்கட்கும் கட்டளைத் தம்பிரான் சுவாமி அவர்கட்கும் இவ்வூரார் நன்றி பாராட்டக் கடைமைப்பட்டுள்ளார்கள்.

இவ் வைபவத்தை, எம்மனோர் பலரும் கண்டு களிக்கச் செய்த டிஸ்டிரிக்ட் கலெக்டர் துரையவர்கள் நீடுவாழ்வாராக.

செய்யாறு தாலூகா ஆதிதிராவிடர்களின் மகாநாடு.

இது நாளது ஜனவரி-௴ 22-௳ சனிக்கிழமை பகல் 9மணிமுதல் மாலை 4 மணி வரை செய்யாறுதாலூகா திருப்பனங்காடு கிராமத்தில் அமைத்திருக்கும் பந்தலில் அகில இந்திய சங்கராஜமஹாசபைத் தலைவர் ஸ்ரீ சி. ஜீனவான்ச சுவாமிகள் தலைமையின் கீழ் நடைபெறும் என்று வரவேற்புக் கமிட்டி காரியதரிசியும் தலைவருமாகிய ஸ்ரீமான்கள் செல்லத்துரான் அவர்களும் தொப்பளான் அவர்களும் அறிவிக்கிறார்கள்-

நாகை வெளிப்பாளையம் சுய மரியாதைச் சங்கம்.

நாளது 10-1-27 மாலை 6 மணிக்கு நாகை வெளிப்பாளையம் பார்ப்பனரல்லாத மகா ஜனங்களின் கூட்டமொன்று மாரியம்மன் கோவில் சன்னிதியில் சங்கத்திற்காக அமர்த்தப்பட்ட கட்டிடத்தில் உயர் திரு. டி. சி. இராஜரெத்தினம் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. தலைவர் முகவுரை கூறியவுடன் சுயமரியாதைச் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி திருவாளர்கள் டி. கே. விஜயராகவலு நாயுடு, பி. ஏ. பி. எல்., டி. பி. ஆறுமுகம், பி. ஜே. மாணிக்க தாஸ், அ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் வெகு தெளிவாகவும், உருக்கமாகவும் பேசினார்கள். பின் நிர்வாக உத்தியோகஸ்தர்களாக கீழ்கண்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்—

காப்பாளர்.

திருவாளர் அரு. சி. கோ. இராமநாத முதலியார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் & பாங்கர்.

தலைவர்.

திருவாளர் இரத்தினசாமி நாடார் அவர்கள் முனிசிபல் அங்கத்தினர் & ஜில்லா தாலூகா போர்டு மெம்பர்.

உப தலைவர்கள்.

திருவாளர்கள் டி. சி. இராஜரெத்தினம் பி. ஏ. பி. எல். இராமானுஜ நாயுடு அவர்கள்

காரியதரிசிகள்.

திருவாளர்கள் ஜீவரெத்தின முதலியார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர், அ. சொக்கலிங்க முதலியார் பஞ்சாயத்து கோர்ட் மெம்பர்

நிர்வாகசபை மெம்பர்கள்

திருவாளர் மணவாளநாயுடுகாரு அவர்கள் ஷண்முகசுந்தர முதலியார் அவர்கள், சுவாமிநாத பிள்ளை அவர்கள், பொன்னுரங்க நாயுடு அவர்கள், டி. பி. ஆறுமுகம் பிள்ளை, ஜே. மாணிக்க தாஸ் அவர்கள், அ. திருஞானசம்பந்தன் அவர்கள். பின் மேற்கண்ட கனவான்களுக்கு அவர்களை ஒப்புக்கொண்டதற்கு நன்றி பாராட்டி மாலையிடப்பட்டு, சந்தனம் தாம்பூலம் கற்கண்டு சீனி வழங்கப்பட்டன. வந்திருந்தவர்கள் நன்கொடையாக ரூ. 112-0-0 கையொப்பமிட்டார்கள். தலைவர் முகவுரைக்குப் பின், வந்தனோபசாரத்துடன் சுயமரியாதைத் தலைவர் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கு ஜே! என்னும் ஆரவாரத்தினிடையே கூட்டம் கலைவுற்றது என நமது நிருபர் அறிவிக்கிறார்.

எங்கும் பார்ப்பன ஆதிக்கமே.

கோயமுத்தூர் ஜில்லாவில் நான்கு டாக்டர்கள் புதிதாக சில தாலூக்காக்களுக்கு நியமிக்கவேண்டியிருந்ததாகத் தெரிகிறது. நமது ஜில்லா போர்டிலும் நமது ஜில்லாவிற்குட்பட்ட எல்லா தாலூகா போர்டிலும் பிராமணரல்லாத கனவான்களே தலைவர்களாயிருந்து வருகின்றனர். நம் நாட்டிலோ எல்லா உத்தியோகங்களையும், பார்ப்பனர்களே வெகுகாலமாகக் கொள்ளையடித்து வந்திருக்கின்றனர் என்ற கிளர்ச்சி பலமாக இருந்து வருகிறது. பார்ப்பனர்களின் உத்தியோக வேட்டையாலேயேதான் நம் நாட்டில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற கட்சி உண்டானதென்பதில் சந்தேகமில்லை. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற கிளர்ச்சி தோன்றியபின் பார்ப்பனருக்கு இனி அதிகம் உத்தியோகம் கொடுக்கக்கூடாது; பார்ப்பனரல்லாதாருக்கே கொடுத்தல் வேண்டும் என்ற அபிப்ராயத்திற்கு சர்க்காரிலும் கூட ஆதரவு காட்டி வந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருக்க நமது ஜில்லா லோகல் போர்டு ஸ்தானங்களில் பார்ப்பனரல்லாதவர்களே தலைவர்களாயிருந்தும், இவ்விடம் நியமிக்கவேண்டி வந்த நான்கு டாக்டர் ஸ்தானங்களையும் பார்ப்பனர்களுக்கே கொடுத்ததானது பெரிய அநியாயமாகும். பார்ப்பனரல்லாத டாக்டர்கள் டாக்டர் வேலைக்கு லாயக்கில்லையென்று போர்டார் நினைத்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. நமது ஜில்லாவில் அநேக பார்ப்பனரல்லாத டாக்டர்கள் பாஸ்செய்துவிட்டு வேலையில்லாமல் காத்திருக்கும்போது, ஒரு ஸ்தானங்கூட பார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்காமல் நான்கையும் பார்ப்பனருக்கே கொடுத்ததற்கு பார்ப்பனரல்லாதார் மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. போர்டு தலைவர்கள் இம்மாதிரி அநியாயம் செய்ய என்ன அவசியமேற்பட்டதோ தெரியவில்லை. என்னவோ சில சிபார்சுகள் என்ற சிறிய காரணம் தவிர வேறு காரணம் சொல்லமுடியாதென்றே நினைக்கிறோம். உத்தியோக வேட்டையில் கைதேர்ந்த பார்ப்பனர்களுக்கு ஆளுக்குத் தகுந்த சிபார்சு பிடிக்க தெரியாமற்போகாது. கேவலம் சிபார்சுகளுக்காக தாலூகா போர்டு தலைவர்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பார்ப்பனர்களுக்கு ஆதரவாகக் கொடுத்திருப்பார்களென்பதை எண்ணும்போது வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆனால் தற்சமயம் தலைமை வகித்துவரும் போர்டு தலைவர்கள் பார்ப்பனரல்லாதாரின் க்ஷேமத்தில் அக்கறையில்லாதவர்களல்லர். ஆனால் பார்ப்பன டாக்டர்கள் ஷை ஸ்தானத்தை அடைய செய்த சூழ்ச்சிகளுக்கு நாட்டின் அபிப்பிராயத்தையும் பார்ப்பனரல்லாதார் க்ஷேமத்தில் போர்டுதலைவர்களுக்குள்ள அக்கரையையும் பலி கொடுத்துவிட்டதானது பார்ப்பனரல்லாதாரின் துர்பாக்கியமென்றே சொல்ல வேண்டும். எப்படியோ அந்தந்த தாலூகா போர்டு தலைவர்களைச் சரிப்படுத்தித் தங்களுக்கு ஆதரவு காட்டும்படி செய்து நான்கு டாக்டர் ஸ்தானங்களையும் பார்ப்பனர்கள் அடித்துக்கொண்டுபோனதைநினைக்கும்போது, நம்மவர்களுக்கு கண்ணிருந்தும் பார்க்கமுடியவில்லை, காதிருந்தும் கேட்கமுடியவில்லை, வாயிருந்தும் பேசமுடியவில்லை, மனமிருந்தும் அறியமுடியவில்லை என்று சொல்வதைத்தவிர நாமொன்றும் சொல்லக் கூடவில்லை. இனிமேலாவது போர்டு தலைவர்கள் இது விஷயத்தைக் கவனித்துச் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஸ்ரீமான் நாயக்கர் 23தேதி மதராஸ், 24 தேதி மாயவரம் 25தேதி திருப்புவனம், 26, 27உ களில் பட்டுக்கோட்டை முதலியவிடங்கட்குச் செல்லுவார்.

சந்தோஷச் செய்தி.

விக்கிரமபுரி என்கிற ஊருக்குப்பக்கத்தில் நடந்த விசேஷ ஒரு கோவில் பூஜையின் போது லட்சக்கணக்கான ஜாதி இந்துக்கள் என்போர்களுடன் இதுவரை கோவிலுக்குள் பிரவேசிக்க அனுமதி கொடுக்கப்படாத ஆயிரக்கணக்கான தீண்டாத வகுப்பார் என்போர்களையும் கோவிலுக்குள் தாராளமாக விட்டுவிடப்பட்டதோடு அத் தீண்டாதார் கைப்பட எல்லோரும் தண்ணீர் வாங்கிக் குடித்தார்கள் நம் நாட்டு உயர்ந்த ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்பவருக்கு இதைப்பார்த்தாகிலும் புத்தி வருமா என்று கேட்கிறோம்.

* * *

சுயராஜ்யக் கட்சியார் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த ஸ்ரீமான் S. முத்தையா முதலியார் ஏமாற்றமடைந்துவிட்டதைக் கொண்டு பார்ப்பனர்களின் நெருக்கு நேராகவே இப்போது கத்தி திட்ட ஆரம்பித்துவிட்டதாகத்தெரிய வருகிறது, "அதாவது தமிழ் "சுயராஜ்யா" என்கிற ஆயுதத்தின் மூலம் சுதேசமித்திரனுடனும் பார்ப்பனர்களுடனும் யுத்தம் தொடுக்க ஆயத்தமாய்க்கொண்டிருக்கிறாராம்.

* * *

தஞ்சை ஜில்லா போர்டு தேர்தல் இம்மாதம் 26-ந் தேதி நடைபெறப்போகிறது. பார்ப்பனர்களும் அவர்களது பக்தர்களும் தங்களால் ஆனதை எல்லாம் செய்து ஜில் போர்டை பார்ப்பன அக்கிரஹாரமாக்கப் பார்க்கிறார்களாம்! அது பலிக்காது என்று சொல்லிக்கொள்வதைக் கேட்டு சந்தோஷமடைகிறோமானாலும் நமக்கு கொஞ்சம் சந்தேகமாகத்தான் இருக்கிறது.

* * *

சேலம் ஜில்லா போர்டையும் பார்ப்பன அக்கிரஹாரமாக்க இப்போதிருந்தே அஜ்ஜில்லா பார்ப்பனர்கள் சில பார்ப்பனரல்லாதாரைக்கொண்டு பிரம்மப்பிரயத்தனம் செய்கிறார்கள். மந்திரிக்குப்பெரியபெரிய சிபார்சுகள் பிடித்துக்காரியம் சாதிக்கப் பார்க்கிறார்கள்- ஆனால் இதுவும் பார்ப்பனர்கள் எண்ணப்படி கஷ்டம் என்றுதான் சொல்லிக் கொள்ளப்படுகிறது.

* * *

ஸ்ரீமான் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் மறுபடியும் திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டாக தெரிந்தெடுக்கப்பட்டார்.

பூளைமேடு சர்வஜன வித்தியாசாலை.

சையன்ஸ் கட்டடத்தின் அஸ்திவாரக்கல் நாட்டுவிழா.

17-1-27-உ திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் ஏ. ஆர். காக்ஸ் அவர்கள் ஷை வித்தியாசாலையின் சையன்ஸ் கட்டடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினர். குறிப்பிட்ட பல பெரியார்கள் விஜயம் செய்திருந்தனர். வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தன புஷ்ப தாம்பூலாதி உபசாரங்கள் செய்த பின்னர் கூட்டம் முடிவுற்றதென ஒரு நிருபர் வரைகிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசியெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

அக்ஷய-ஹூ தை-மீ 10-உ

மதுரைத் தீர்மானங்கள்.

மதுரைத் தீர்மானத்தைப்பற்றி, நமது எதிரிகளும், பொறுப்பற்றவர்களும் என்னதான் பரிகாசமாகவும், அலட்சியமாகவும் பேசினாலும் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை, விடுதலை, செல்வநிலை ஆகிய இவ்வைவற்றினது மார்க்கங்களும் அம்மதுரைத் தீர்மானங்களிலேயே அடங்கிக்கிடக்கின்றனவென்பதை ஒவ்வொருவரும் மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும். பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதை முதலியவை மாத்திரமல்லாமல் நமது நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் சுயமரியாதையும் விடுதலையும், செல்வமும் அத்தீர்மானங்களிலேயே அடங்கிக்கிடக்கின்றன. அவைமாத்திரமல்லாமல் நமது அரசியல் முறையில் கட்டுண்டு அநுபவித்துவரும் கொடுமைகளுக்கும் நிவர்த்தி மார்க்கம் அவற்றிலேயே அடங்கியிருக்கின்றன. அன்றியும், நாம் நம் நாட்டு மக்கள் என்றே சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்களால் மிதிக்கப்பட்டு அநுபவித்துவரும் இழிதகைமை மக்களிலிருந்து மீளும்நெறியும் அவற்றிலேயே அடங்கிக்கிடக்கின்றது. இன்னமும் இவைபோன்ற மக்களின்—நாட்டின் கோடிக்கணக்கான கொடுமைகள் என்னும் வறுமை முதலிய வியாதிகளுக்கும் "சஞ்சீவி" என்றுசொல்லத்தக்கதேதான் நமது மதுரை மஹாநாட்டின் தீர்மானங்கள்!

காந்தியடிகள் இந்தியாவின் எல்லாக் குறைகளும் நீங்குவதற்காகக் கண்டுபிடித்த "பர்டோலி தீர்மான"மாக்கும் நமது மதுரை மகாநாட்டின் தீர்மானங்கள்! ஆதலால் அதை நிறைவேற்றுவதில் கவலைகொள்ளுதல்தான் மக்கள் சுயமரியாதைக்கும், விடுதலைக்கும் செல்வத்திற்கும் தொண்டுசெய்வதாகும்.

தீண்டாமை.

தீண்டாமையை ஒழித்துவிட்டால் சுயமரியாதையின் எதிரிகளான நமது பார்ப்பனருக்கு நமது நாட்டில் இடமுண்டா? அவர்கள் "பூசாரக" நமது நாட்டில் வாழ முடியுமா? தீண்டாமை, உயர்வு—தாழ்வு என்கிற தந்திரம் ஒன்றிலல்லது நமது பார்ப்பனர்களுக்கு இந்நாட்டில் வேறு என்ன லாவகம் யோக்கியதை இருக்கிறது?

உலகத்திலுள்ள இழிவுகளெல்லாம் ஒருருவமெடுத்தாற்போன்றுள்ளும் ஒரு வகுப்பார் ஆதிக்கத்திலிருக்கக் காரணம், இந்த உயர்வு—தாழ்வு என்கிற போலித் தத்துவமல்லாமல் வேறென்ன? "ஆரியவிலோ," "ஆன்மார்த்தத்திலோ" பார்ப்பனர்களின் வாழ்க்கையில் எவ்வித இழிகுணம் அவர்களிடமில்லையென்று சொல்லமுடியும்? எவ்விதமான உயர்குணம் ஆச்சாரத்தாரிடத்திலிருப்பதாகச்சொல்லமுடியும்? உண்மையிலவருநிப்படி அவர்களுடைய உரிமையான தொழிலே பிச்சை எடுப்பது என்பதாக ஏற்படுத்திக்கொண்டார்கள். அதற்குமேன்மை கற்பித்துக்கொண்டு தானுமொனமின்றிப் பணம் சம்பாதிக்க வழி செய்துகொண்டார்கள். உண்மையில் இந்த அடிமைத் தன்மையானதும், பிறரை ஏய்ப்பதால் மாத்திரம் வாழத்தக்கதுமான தொழிற்றுறைகளில் அநுபோகம் பெற்று வெகு சமர்த்தர்களாகிவிட்டார்கள். அவர்களுடைய நாகரிகங்களோ சொல்லத் தேவையில்லை. சிறு குழந்தைகளைக் கல்யாணஞ் செய்துகொள்ளுவார்கள். பதினமூன்று வயதிலேயே பிள்ளை பெறும்படி செய்துவிடுவார்கள். அது தாலியறுத்துவிட்டால் தலை மொட்டை அடித்து குரூரப்படுத்திவிடுவார்கள். தயவு, தாட்சண்ணியம், அன்பு என்கிற குணங்கள் பூதக்கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்காது. மற்றொருவனுக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால் தங்கள் வீட்டிலுள்ள தண்ணீரெல்லாம் தோஷமாய்விடுமென்கிற கொள்கையுடைய கருணையாளர்கள். இன்னும் எத்தனையோ குற்றமுள்ளவர்களாயிருப்பதோ... இக்குற்றங்களை மற்றவர்களுக்குள்ளும் புகுத்துவதே தங்கள் "உலகசேவை"யென்று நினைப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் இன்று ஆதிக்கம் பெற்றிருப்பதன் காரணம் தீண்டாமை, உயர்வு—தாழ்வு என்கிற தந்திரங்களால் தானேயல்லாமல் வேறு என்ன? ஆதலால், இத் தந்திர சாதனங்கள் ஒழிக்கப்பட்டால் அன்றே மக்களுக்கு "சுயமரியாதை" உதயமாகிவிடும். இதன் பயனாய் "பிராமணர்" "சூத்திரர்" "பஞ்சமர்" என்பவர்கள் ஒழிவதோடு மக்கள் எல்லாரும் சகோதரர்களாகவும் காணப்படுவார்கள்.

கதர்:

அதுபோலவே "கதரும்' நமது நாட்டு மக்களைப்பிடித்த வறுமையை அடியோடு ஓட்டி உண்மையான விடுதலையையும், மனச்சாட்சியையும் அளிக்கும். "கதர்த்திட்டம்" என்பது வெறும் கதரையே முதன்மையாய்க்கொண்டதல்ல. நாட்டின் விடுதலைக்குப் பெரும் விரோதியான வறுமையை வேரோடு அழிப்பதற்காதாரமானவை எவைவென்றால் கைத்தொழிலும் அதன் மூலம் கிடைக்கும் பொருள் வருவாயுமே யாகும். இதுகாலை, அவ்விஷயத்தில் நமது நாட்டின் நிலைமையென்ன? நாளுக்கு நாள் நமநாட்டுக் கைத்தொழில்கள் அருகிக்கொண்டே வருகின்றன. நம்நாட்டு மக்களில் பார்ப்பனர் நீங்கிய மற்றையோர் 100க்கு 99 பேர் கைத்தொழில் மூலமே வாழ்ந்து வந்தவர்கள். பழங்கால வாழ்வில், நாட்டின் செல்வமானது விவசாயம், கைத்தொழிலாகிய ரூபமாயிருந்ததேயன்றி பணம் காசு, வீடு முதலிய சொத்துக்கள் ரூபமாயிருந்ததில்லை. இப்போது அச்செல்வமான கைத்தொழில் அடியோடு ஒழிந்துவிட்டது. விவசாயமுங்கூட வாழ்விற்காக என்றல்லாமல் பணத்திற்காகவென்றாகிவிட்டது. இதன் மூலம் நம் நாட்டின் இயற்கைக்கு விரோதமான நிலையேற்பட்டதால் நமது நாட்டையே வறுமை முற்றுகை போட்டுக்கொண்டுவிட்டது. முதலாவது கைத்தொழில்கள் எவ்வழிகளில் அருகிவிட்டனவென்பதைக் கவனித்துப் பாருங்கள்!

நம் நாட்டு மக்களின் கைத்தொழில் பஞ்சு அறைத்தல் (பஞ்சில் கொட்டையெடுத்தல்) நூல் நூற்றல், நெய்தல், சாயம்போடுதல், பூவேலைசெய்தல், துணி தைத்தல், உலோகங்களின் மூலம் விளக்கு, பாத்திரம் வகையறா செய்தல், ஆகாரப்பொருள் தயார் செய்தல் அதாவது நெல் குத்துதல் பலவகைத்தல், கொல் தச்சுவேலை மாட்டுவண்டி, குதிரைவண்டி செய்தல லாடம் அடித்தல் இவற்றை ஓட்டுதல் இந்த மாடு குதிரைகளுக்குப் புல பிடுங்கிக்கொண்டுவந்துபோடுதல்குதிரை தேய்த்தல் மக்களுக்கு வைத்தியம் மருந்து செய்தல், மருந்து விற்றல் முதலிய அநேக காரியங்களில் மக்கள் ஈடுபட்டு யாவரும் தொழில் செய்து பிழைத்துவர முடிந்தது. உதாரணமாக ஆகாரத்தை எடுத்துக்கொள்ளுவோம் ஒரு வேளை 1-க்கு 500 பேர் சாப்பிடக்கூடிய ஒரு மூட்டை அரிசிக்கு-கையால் குத்துவதானால்-2 மூட்டை நெல் குத்துவதன் மூலம்-4 பெண்கள் குத்தவும் நான்கு முக்கால்-மூன்று பட்டணம் படி அரிசிபோகவும் செய்வதால் குறைந்தது அதில் 10 பேருக்குச் சாப்பாடுகிடைக்கும் இரண்டாவதாக உடையை எடுத்துக்கொள்ளுவோம்.

500 பேருக்கு 500 ஜதை வேஷ்டி என்பதாக குறைத்து வைத்துக்கொண்டாலும் ஜதை ஒன்றுக்கு 6 மாதத்துக்கு 180 நாள்களுக்கு வருவதாய் வைத்துக்கொள்ளுவோம். இது கதராயிருந்தால் 1 ஜதை வேஷ்டி 2 ராத்தல் பஞ்சு வீதம் 500 ஜனங்களுக்கு 1,000 ராத்தல் பஞ்சு ஆகும். இப்பஞ்சை பருத்தியிலிருந்து பஞ்சு வேறாக கொட்டை வேறாகப் பிரிக்க அதாவது 2 பாரம் பஞ்சுக்கு அறை கூலி 20-ரூபாய் கிடைக்கும் இது கைமனையால் அறைக்கப்பட்டால் இந்தச் 20 ரூபாயுக்கு 200 பேர் ஒரு வேளை அரிசி சாதமாக நன்றாய் சாப்பிடலாம். இந்த பஞ்சை 1,000 ராத்தல் நூலாக நூற்பதில் ராத்தல் ஒன்றுக்கு ஐந்து அணா வீதம் 312—8—0 ரூபாய் கூலி கிடைக்கும இந்த ரூபாயைக்கொண்டும் ஒரு நாளைக்கு 3,125 பேர் நல்ல அரிசிச் சாதம சாப்பிடலாம். இந்த 1,000 ராத்தல் நூலைக்கொண்டு 500 பேருக்குச் சராசரி 2,000 கஜம்துணிவேஷ்டி நெய்வதில் கஜத்துக்கு 0—2—6 வீதம் 2,000 0—2—6 அணாவாகிய 312—8—0 ரூ. நெசவு கூலிகிடைக்கும், இதன் மூலமும்

குறைந்தது 3125 பேர் நல்ல அரிசிச் சாதம் சாப்பிடக்கூடும். இவர்களில் பெண்களாயிருந்து சேலை கட்டல் சாயம் போடல் சட்டைக்கும் பைக்குக்கும் முதலியவைகளில அதிகமாகும் கூலிகள் இதுகளுக்காக 4-ல் 1பாகம் அதிகப்படுத்தலாம்; இந்தவகையில் 1,500 பேருக்கு குறையாமல்தினம் சாப்பாடு கிடைக்கும். ஆகவே 500 பேர்களின் தனிக்கு ஏற்படும் கூலியில் மாத்திரம் 8000 பேருக்குச் சாப்பாடு கிடைக்கும். இதை மொத்தமாகிய 180-ல்வகுத்தால சராசரி தினம் 45 ஆகும்; அதாவது ஆகாரத்திற்காக நெல்குத்துவதில் 100-க்கு 2 பேர் வீதமும் துணி கட்டுவதில் தினம் 100-க்கு 9 பேர்வீதமும் சாப்பிடக்கூடிய கூலி கிடைக்கும். ஆக இவ்விரண்டு காரியங்களை மாத்திரம் யந்திரத்திலல்லாமல் மக்களைக் கொண்டே கைத்தொழில் மூலமாக செய்வதில் 100-க்கு 11 பேர் நல்ல சாப்பாடாக சாப்பிடத்தகுந்த மாதிரியும் 100-க்கு 20 பேர் கஞ்சியாகக் குடிக்கக்கூடிய மாதிரியும் வேலை கிடைக்கிறது என்றால் மற்றபடி நாம் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு வேலை மற்றும் நமநாட்டு வேலைகளைப் பற்றி சரிவரக் கணக்குப்போட்டு பார்ப்பதானால் ஏறக்குறைய 100-க்கு 100 பேர் சாப்பிடக்கூடியவளவு கூலி கிடைக்கவேண்டிய தொழில்கள் இருந்து வந்தன இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்துவருகின்றன. கண்ணாடி சாமான், பாத்திர பண்டங்கள் முதலியவைகளினால் எவ்வளவு தொழில்கள் கெட்டு மக்கள் ஜீவனம் செய்யமுடியாமல் போய்விட்டது.

ஆகவே யந்திரங்களாலும் வெளிநாட்டிலிருந்து சாமான்கள் தருவிப்பதனாலுமே நாட்டில் பெரும்பான்மையான மக்கள் வறுமையால் அவஸ்தைப்பட்டு மனச்சாட்சி, மானம், கற்பு, ஒழுக்கம் முதலியவைகள் இழக்க நேரிட்டிருக்கின்றதேயல்லாமல் சட்டசபையில் தோற்றதும் கவர்னர் நிர்வாகசபை மெம்பர் மந்திரி ஐகோர்ட் ஜட்ஜு முதலிய வேலைகள் கிடைக்காமல் போவதினாலும், அல்லவென்பது உண்மையான தேசாபிமானமுள்ளவர்களுக்கு விளங்காமற்போகாது.

ஆகவே கூடியவரையிலாவது ஏழைகளைக்காப்பாற்றி தரித்திரத்தை ஓட்டுவதுதான் கதரின் ரகஸியமேயொழிய முரட்டுத்துணி உடுத்துவது என்ற வேஷக்கொள்கையல்ல.

மதுவிலக்கு.

அதுபோலவே மதுபான விஷயமும் நமது நாட்டின் அடிமைத்தனத்திற்கும், அந்நிய ஆட்சியின் வளர்ச்சிக்கும் ஆதாரமாயிருக்கிறது. மதுபானத்தினால் தான் நமது ஏழை மக்கள் அதாவது கொஞ்ச நஞ்சம் மீதியுள்ள தொழிலாளிகள் வேலைசெய்து, கூலிபெற்றும் பட்டினிகிடக்கவும் மதுவெறியினாலேற்படும் கஷ்டத்தால் பெருங்குடித்தனங்கள் அழியவும் அதனாலுண்டாகும் விவகாரங்களாலேயே பார்ப்பனர்கள் உத்தியோகம் லஞ்சம் முதலிய வழிகளில் நமது பொருளைக்கொள்ளைகொள்ளவும், இன்னும் எத்தனையோ வகைகளில் கஷ்டநஷ்டப்படவும் ஏற்படுகிறது.

ஆகவே மதுரைத் தீர்மான நிறைவேற்றத்தால் நமது நாட்டில் 100க்கு 90 பேர்களுக்கு மேலாயிருக்கும் பார்ப்பனரல்லாதார்களுக்கே முக்கிய குறைகளான சுயமரியாதையற்றிருத்தல், மனச்சாட்சியின்றியிருத்தல், பட்டினிகிடத்தல் முதலிய எல்லாக் குறைகளும் நீங்கி அவர்களுக்கே எல்லாவழிகளிலும் பிரதியும் அனுகூலமாக இருப்பதால் இத்திட்டங்களை நிறைவேற்றவேண்டியது நமதுடைய கடமையாயிருக்கிறது. இத்திட்டங்களை தாங்கி சகித்திருந்து மெல்ல மெல்ல வெளியாக்க வேண்டிய அவசியமும் இத்திட்டத்தை நடத்தக் காங்கிரஸை கட்டிக்கொண்டிருந்த மகாத்மாவை காங்கிரசை விட்டு வெளியாகச் சூழ்ச்சி செய்ய வேண்டிய அவசியமும் நமது பார்ப்பனருக்கு ஏற்பட்டதும் இந்தக் காரணங்களால் தான். சுருக்கமாகச் சொல்வதானால் இத்திட்டங்களால் பார்ப்பனரல்லாதாருக்கே அனுகூலமும் பார்ப்பனர்களுக்குப் பெருத்த ஆபத்தும் தான். ஆகலால் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் உண்மையான கவலையுள்ளவர்களும் சுயமரியாதை லட்சியமுள்ளவர்களும் ஏழைமக்களிடத்திலும், தொழிலாளிகளிடத்திலும், கருணையுள்ளவர்களும் செய்யவேண்டிய முக்கியமான வேலை மதுரை மகாநாட்டு தீர்மானங்களை நடத்திக்கொடுப்பதேயாகும் என்று மறுபடியும் சொல்லுவோம்.

மற்றபடி அர்த்தமில்லாதவார்த்தைகளான "சுயராஜ்யம்" "உரிமை" "தேசியம்" "சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுதல்" "சிங்கத்தின் குகையில் போய் அதன் வாயைப் பிளத்தல்" "பூரண சுயராஜ்யம்" முதலிய அரசியல் பரிபாஷைப்பெயர்களைச் சொல்லிக்கொண்டு திரியும் வேலைகளை பார்ப்பனரைப்போலவே நம்மிலும் உள்ள சிலவயிற்றுச்சோற்று "தேசபக்தர்" களுக்கு விட்டுவிடலாம். பார்ப்பனரல்லாதாருக்குப் பார்ப்பனர் கோரும் "பார்ப்பன ஆதிக்க சுயராஜ்யம்" ஒரு சிறிதும் தேவையில்லை அதில் எந்தப்பார்ப்பனரல்லாதார் கலந்துகொள்வதும் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு துரோகமேயாகும். பார்ப்பனரல்லாதாருக்கு வேண்டியதெல்லாம் மஹாத்மா கோரும்படியான நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றுதலென்னும் சுயராஜ்யம் தான. அதுதான் மதுரைத் தீர்மானம்! அதுதான் மதுரைத் தீர்மானம்! அதுதான் மதுரைத் தீர்மானம்.!

அதுவானாலும் கிடைக்கட்டும்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் பார்ப்பனருக்கு ஒரு "வஜ்ஜிரக்கோடாரி" அதாவது தைரியமாய் யாரையும் வைவார். அப்படி வையவும் அவருக்கு சில சௌகரியமுண்டு; என்னவென்றால்— "சத்தியமூர்த்தி வைவதையெல்லாம் பொருட்படுத்துவதானால் உலகில் மனிதனுக்கு வேறு வேலைசெய்ய நேரமே கிடைக்காது" என்று வசவு கேட்பார் ஒவ்வொருவரும் நினைக்கும்படியாகவும், "சத்தியமூர்த்தி வைவதையெல்லாம் பொருள்படுத்தலாமா" என்று ஊரார் வையப்பட்டவரை கேட்கும்படியானதுமான ஒரு சௌகரியம் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு உண்டு. இதனால் இன்னும் வைய முடியுமானால் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு வாய் வலித்தால் மாத்திரம் வசவுத்தடை ஏற்படுமேயொழிய மற்றவர்களால் தடை ஏற்படுத்த முடியவே முடியாது. இந்த வசவைப் பார்த்து ஆனந்தப்படும் பாக்கியம் நமது பார்ப்பனர்களுக்கு இருப்பதால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை அவர்கள் ஒரு வஜ்ஜிரகோடாரி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐயோ பாவம்! "வஜ்ஜிர கோடாரி"க்கு அவரால் வேலை வாங்கிக்கொண்ட சுயராஜ்யக் கட்சியார் சட்டசபை தலைவர் ஸ்தானம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். தொலைந்துபோகட்டும் அதுதான் பார்ப்பனர் என்கிற காரணத்திற்காக கொடுக்கவில்லை என்றாலும், சத்தியமூர்த்தி சட்டசபைத் தலைவரானால் சட்டசபை மெம்பரை ராஜீநாமா கொடுத்துவிடுவதாக மிரட்டியதால் கொடுக்கப்படவில்லையென்று சிலரும், (சில சர்க்கார் உத்தியோக மெம்பர்கள்கூட மிரட்டினார்களாம்) சிலர் தங்களுக்கு கொடுக்காவிட்டால் கட்சியைவிட்டு வெளியேறிவிடுவதாகப் பயமுறுத்தியதால் கொடுக்கப்படவில்லை என்று சிலரும், முன்னாலேயே மந்திரி வேலை கொடுப்பதாய் வாக்களித்ததால் மந்திரி வேலை ஒப்புக்கொள்ளாததால் அதற்கு பதிலாக 5500 ரூ இல்லாவிட்டாலும் 2000 ரூபாயாவது வேண்டாமா என்று தலைவர் வேலையாவது கொடுக்கவேண்டுமே என்று ஏக தலைவர் காணயத்தைக்காப்பாற்ற பார்த்தாலும் கிடைக்காமல் போய்விட்டதென்றும் சிலர் சொல்லிக்கொள்வதால் ஏதாவதொன்றினாலோ எல்லாவற்றினாலோ கிடைக்காமல் போயிருக்கலாம். அது தான போகட்டும் என்றாலும் கட்சித்தலைவர் பதவியாவது கிடைக்கவேண்டாமோ என்று பார்த்தால் அதற்கும் "பார்ப்பனர் கூடாது" என்று சிலர் சொன்னதாலும் "சத்தியமூர்த்தி கட்சித் தலைவரா அப்படியானால் எனக்கு கட்சியும் வேண்டாம் சுயராஜ்யம்கூட வேண்டாம்" என்று சிலர் சொன்னதாலும் "எனக்கும் வேண்டாம், சத்தியமூர்த்திக்கும் வேண்டாம் வேறு யாருக்குக் கொடுத்தாலும் சரி" என்று சிலர் சொன்னதாலும் ஆந்திரா தமிழ்நாடு என்கிற நாட்டு வாதத்தாலும் ஏக தலைவரான ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காருக்கே ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு தலைவர் பட்டங் கட்டுவதில் பயம ஏற்பட்டதாலும் அதாவது வேறுகட்சியார் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை ஏமாற்றிவிட்டால் பிறகு தம்முடைய ஏக தலைவர் ஸ்திதிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்ததாலும் இன்னும்பல அய்யங்கார் பார்ப்பனர்களின் போட்டியிலும் கிடைக்காமல் போய்விட்டது. ஆகவே இந்த கோபத்தின் பலனாய் கட்சி உபதலைவர் பதவியைக்கூட காலால் உதைத்துத் தள்ளிவிட்டார். கடைசியாக ஊர் ஜனங்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை வெறும்சத்தியமூர்த்தி என்று எண்ணவும் கூப்பிடவும் ஏற்பட்டதால் இப்போது—கோபம் தெளிந்தவுடன் ஏதாவது இருக்கட்டும் என்கிற ஞானோதயமாகி ஏக தலைவரை உபதலைவர் பட்டமாவது இருக்கட்டும் என்று கேட்டுக்கொண்டதால் ஏக தலைவரும் "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவில் ஆண்டி" என்பதுபோல் பாவம் ஒரு நாயுடுவைப் பிடித்து ஏமாற்றி அவரிடம் ராஜீனாமா வாங்கிவிட்டார். இந்தப் பட்டத்தை சீக்கிரத்தில் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு சூட்டி விடுவார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களும் அதுவானாலும் கிடைக்கட்டும் என்கிற ஆசையின்பேரில் தலையை நீட்டிக்கொண்டிருக்கிறார். வகுப்புவாதம் ஒழிந்த தன்மையும் உத்தியோக ஆசை வெறுத்த தன்மையும் அளவுக்குமீறிய கட்டுப்பாட்டை உடைய தன்மையும் எவ்வளவு தூரம் சுயராஜ்யக் கட்சியில் துலங்குகிறது என்பதை இதிலிருந்தே எல்லோரும் அறிந்துகொள்ளலாம். "ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய அபேக்ஷை ஆகிய மூன்று துர்க்குணங்களையும் வெறுத்து நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்துநான்கு கலைக்கியானம் தெரிந்த ஞானபண்டிதனை எனக்கும் இரண்டணா ஒன்றும் தெரியாத இந்த தற்குறிக்கும் இரண்டணாவா?" என்று ஒரு சாஸ்திரி கேட்டதுபோல் இருக்கிறது,

ஜென்மத்துணம் போகுமா?

சுயராஜ்யக்கட்சி பார்ப்பனக்கட்சி என்றும், அது பார்ப்பன ஆதிக்கத்திற்காகவே ஏற்பட்டதென்றும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உழைக்கச் சம்மதப்படும் சில பார்ப்பனரல்லாதாரை மாத்திரம் கூலி கொடுத்தோ, ஆசைவார்த்தை காட்டியோ அதில் சேர்த்துக்கொள்ளப்படுகிறதென்றும் பலதடவைகளில் சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறோம். அது போலவே இப்போது சட்டசபைத் தேர்தல்கள் முடிந்ததும் தங்கள் காரியம் சாதித்துக்கொள்ளக்கூடியமாதிரியில் தங்களுக்குப் பக்கபலம் இருக்கிறது என்பதாகக்கருதி இப்போது சட்டசபைக்கு பல தீர்மானங்கள் கொண்டு வருகிறார்கள். அதாவது—முதலாவதாக தேவஸ்தான சட்டத்தை ஒழிப்பதற்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேவஸ்தானவிஷயம் சுயராஜ்யக்கட்சி விஷயமல்ல இது தனித்தனி நபர்களுக்குச் சம்பந்தப்பட்டது என்று சொல்லி தேர்தலில் பாமர ஜனங்களை ஏமாற்றி ஓட்டுப்பெற்றுவிட்டு இப்போது தேவஸ்தானவிஷயம் சுயராஜ்யக்கட்சிவிஷயமானதோடு காங்கிரஸ் விஷயமாகச்செய்து விட்டார்கள். இத்தீர்மானம் கொண்டுவந்தது கோவை ஜில்லா பிரதிநிதி ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமண ஐயங்காரே ஆவார். கோவை ஜில்லாவில் ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கஞ் செட்டியார் அவர்களுக்கு விரோதமாய் ஓடி ஓடி ஓட்டு வாங்கிக்கொடுக்கிற சிகாமணிகள் இதற்கு என்னபதில் சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை. ஸ்ரீமான் ஆய்யங்காரை இது யோக்கியமா என்று இவர்கள் கேட்பார்களானால் அவர் உடனே சரியானபதில் சொல்லாதிருப்பார் என்றே நினைக்கிறேன், அதாவது என் பணத்தினால் ஓட்டு சம்பாதித்தேனே ஒழிய யாருடைய தயவினாலும் எந்த வாக்குத்தத்தத்தினாலும் ஓட்டுப்பெறவில்லை; என்னிடம் பணம் வாங்காமல் எனக்கு யார் வேலைசெய்தார்கள் ஓட்டுச்செய்தார்கள்? என்று கேட்பார்களாதலால் அய்யங்காருக்கு வேலை செய்தவர்கள் தலையைத் தொங்கப்போட்டுக்கொள்ளவேண்டியது தான். மற்றொரு தீர்மானம மற்றொரு பார்ப்பனரால் கொண்டுவரப்பட்டிருக்கிறது அதாவது பார்ப்பனரல்லாதார் கட்சி மந்திரி காலத்தில் அரசாங்கக்கலாசாலைகளில் பிள்ளைகளைச்சேர்த்துக்கொள்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்ததை இப்போது எடுத்துவிடவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த கமிட்டி இருப்பதால் நாலு இரண்டு பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளை காலேஜில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுவருகிறது. இந்த நிலை இரண்டோ பிள்ளைகள் படிப்பது கூட நமது பார்ப்பனர்களாகிய சுயராஜ்யக் கட்சியாருக்கு கண்ணில் குத்துகிறபடியால் அடியோடு காலேஜுகளை பார்ப்பன சத்திரங்களாக்க ஆரம்பித்து விட்டார்கள். இதெல்லாம் பார்ப்பனருடைய தப்பிதமல்ல, பின்னையாருடையதென்றால் அவர்கள் பின் திரிந்த திரியும் திரியப்போகும் பார்ப்பனரல்லாத வயிற்றுச்சோற்று தேச பக்தர்களின் தப்பிதமேயாகும் என்பதே நமது அபிப்பிராயம். இன்னமும் என்ன என்ன நடக்குமோ பார்ப்போம்.

ஈரோடு முனிசிபாலிட்டியில் இரட்டை ஆட்சி.

சேர்மென் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச முதலியார் ஊருக்கு போகும்போதெல்லாம் மினிட்டு புஸ்தகம் முதல் முக்கியமான ரிகார்டுகளை வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் வைத்துவிட்டு போவது வழக்கம்.

அதுபோல் இந்தத்தடவையும் புஸ்தகம் எடுத்துக்கொண்டு போகாமல் முக்கிய குமாஸ்தாக்களுக்கு நான் வரும்வரை ஆபீசுக்கு வரக்கூடாதென்று லீவு கொடுத்துவிட்டுப் போய்விட்டார். ஆனால் ஒரு அவசரகாரியமாய் வைஸ்சேர்மென் ஸ்பெஷல் மீட்டிங்கு கூட்டினார். சேர்மெனுக்கு வேண்டிய முனிசிபல் சிப்பந்திகள் ஒவ்வொரு கவுன்சிலர் வீட்டுக்கும் போய் கவுன்சிலர்களை வரவொட்டாமல் செய்தும் அவசர காரியத்தில் அக்கரை உள்ள ஒரு கனவான் கோரம் சேர்த்துவிட்டார். மினிட் புஸ்தகம் இல்லாததால் கடையில் புது புஸ்தகம் வாங்கி எழுதப்பட்டது. ஆபீசு மேனேஜர் சேர்மெனுக்கு பயந்துகொண்டு கவுன்சிலர்கள் ஆஜர் கையெழுத்துப்போடும் புஸ்தகம்கூட காணோமென்று சொல்லிவிட்டார் வைஸ் சேர்மென் தனிக்கடிதத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு மேனேஜரிடம் கையெழுத்து புஸ்தகம் காணோமென்று ஸ்டேட்மெண்டு வாங்க உத்தேசித்ததும் கையெழுத்து புஸ்தகம் மானேஜருக்கு கிடைத்துவிட்டது. மறுநாள் சேர்மென் வந்ததும் வைஸ்சேர்மென் நீக்கிய ஆளுக்கு வேலை கொடுத்து அவர் நியமித்திருந்த ஆளை நீக்கிவிட்டார். மீட்டிங்கில் நடந்த தீர்மானத்தை அன்றே கலெக்டருக்கும் அனுப்பியாய்விட்டதால் தீர்மானத்தின் மேல் சேர்மெனுக்கு வரும்படி இல்லாமல் போய்விட்டது.

வரிசெலுத்துவோன்.

(11ம் பக்கத் தொடர்ச்சி,)

செட்டியாரவர்கள் காழபாளையம், அப்பாச்சி கவுண்டர் அவர்கள் காளிங்கராயன்பாளையம், பெருமாள்சாமி செட்டியார் அவர்கள், தேவராஜ பிள்ளையவர்கள், ஸ்ரீனிவாசம் செட்டியாரவர்கள்.

அவநாசி தாலூகா.

திருவாளர் பட்டக்கார வீரப்பகவுண்டர் அவர்கள் மேட்டுப்பாளையம், கரியஞ் செட்டியார் அவர்கள் சேவூர், பெரியதம்பிக் கவுண்டர் அவர்கள் நல்லிக்கவுண்டம்பாளையம், முத்துரத்தின சபாபதிக்கவுண்டர் அவர்கள் ராக்கியாபாளையம், ராமசாமிக் கவுண்டரவர்கள், யூனியன் போர்டு பிரசிடெண்டு அவநாசி, பழனிச்சாமித் தேவர் அவர்கள் அன்னூர்,

பல்லடம் தாலூகா.

திருவாளர் K R ஈஸ்வரமூர்த்தி கவுண்டர் அவர்கள், N துரைசாமிக் கவுண்டர் அவர்கள் புதூர், முத்துக்குமாரசாமிக் கவுண்டர் அவர்கள் பல்லடம், S K கருப்பண்ணத்தேவர் அவர்கள் சூலூர், K கிருஷ்ண சாமி நாயுடு அவர்கள், லட்சுமிநாராயண சாமி நாயக்கர் அவர்கள் அனுப்பபட்டி, N A அர்த்தநாரியப்ப முதலியாரவர்கள் கொடுவாய், R சுப்பராயக் கவுண்டரவர்கள வடுகபாளையம், K V வெங்கிடாசலம் பிள்ளை அவர்கள் திருப்பூர், M N சிக்கண்ண செட்டியாரவர்கள் திருப்பூர், V R ராமசாமிக் கவுண்டர் அவர்கள் புதூர், மகமதலி சாயபு அவர்கள், P சிதம்பர முதலியார் அவர்கள் பெருமாநல்லூர், முருகநாத செட்டியார் அவர்கள் அனுப்பர்பாளையம், M V கருப்பண செட்டியார் அவர்கள்,

ஈரோடு தாலூகா.

திருவாளர்கள் M S முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள், ஜனாப் ஷைக்தாவூத் சாயபு அவர்கள், M A ஆண்டமுத்துக் கவுண்டரவர்கள், ஈ. ஆர். கந்தசாமிக் கவுண்டரவர்கள் கஸ்பா, K S ரங்கப்ப கவுண்டரவர்கள் கஸ்பாபுளியம்பட்டி, K ராமசாமி முதலியாரவர்கள் சென்னிமலை, V S முருகேசமுதலியாரவர்கள் சென்னிமலை, T ஸ்ரீனிவாச முதலியாரவர்கள், B A B L, E V நஞ்சப்ப செட்டியாரவர்கள் B A K காதர் சாயபு அவர்கள் உப்பு மண்டி, அ. பாஷா சாயபு அவர்கள், கந்தப்ப கவுண்டரவர்கள் ஊற்றுக்குழி, செ. ந. பழனிவேலப்ப கவுண்டரவர்கள், C S குமாரசாமிக் கவுண்டரவர்கள்,

கோபிசெட்டிபாளையம்

திருவாளர்கள் தாசப்ப கவுண்டர் அவர்கள் பங்களாபுதூர், K N நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் கொங்காபாளையம், முத்துவேலப்ப கவுண்டர் அவர்கள் புதுப்பாளையம், S முத்துக்கவுண்டரவர்கள் கூகலூர், N P கரிச்சி கவுண்டரவர்கள் நல்லகவுண்டம்பாளையம், அட்டியண கவுண்டரவர்கள், தூக்கநாயக்கம்பாளையம், பெருமா கவுண்டரவர்கள் தூக்கநாயக்கம்பாளையம், பழனியப்ப கவுண்டரவர்கள் குருமந்தூர், K R சுப்பிரமணிய கவுண்டரவர்கள் கள்ளிப்பட்டி, ஒதிவேலப்ப கவுண்டரவர்கள் புளியம்பட்டி, ரங்கசாமி முதலியாரவர்கள் புளியம்பட்டி, மாஸ்த்தி கவுண்டரவர்கள் நஞ்சைபுளியம்பட்டி, கிஞ்சப்ப கவுண்டரவர்கள் நஞ்சைபுளியம்பட்டி, ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமியாரவர்கள் தூக்கநாயக்கம்பாளையம், திருவாளர்கள் S G லிங்கே கவுண்டரவர்கள் சத்தியமங்கலம், K B வெங்கட்ராம செட்டியாரவர்கள் சத்தியமங்கலம், V S கிருஷ்ண செட்டியாரவர்கள் சத்தியமங்கலம்.

பொள்ளாச்சி தாலூகா

திருவாளர்கள், லோக்கல் ஜமீன்தாரவர்கள் பொள்ளாச்சி, P இரத்தினசபாபதி கவுண்டரவர்கள் ஷெயூர், K ராயப்ப கவுண்டரவர்கள் ஷெயூர், ஆறுமுகக் கவுண்டரவர்கள் ஆண்டிபாளையம். இராமசாமிக் கவுண்டரவர்கள் சிங்காநல்லூர், நல்லமுத்துக் கவுண்டரவர்கள் செல்லப்பம்பாளையம், K P முத்துச்சாமி செட்டியாரவர்கள், ஆனைமலை, அப்துல்ரஜாக் சாயபு அவர்கள் ஷெயூர், கொழுந்தவேல் பிள்ளையவர்கள் B A B L, ஷெயூர், நாராயணசாமி நாயக்கரவர்கள் ஷெயூர், சுப்பையத் தேவரவர்கள் செட்டிக்காரபாளையம், ஆறுமுகம் பிள்ளையவர்கள் B A B L, P நடராஜம் செட்டியாரவர்கள் பொள்ளாச்சி.

கோயமுத்தூர்

பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

1927 வரு ஜனவரி மீ 18ந் தேதி மாலை 5-30 மணிக்கு திருப்பணக்கார வீதியில் ஸ்ரீமான் வெள்ளியங்கிரி செட்டியாரவர்கள் வீட்டில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் ஆதரவின்கீழ் கோவை முனிசிபல் சேர்மனும் ஜில்லா போர்டு பிரசிடெண்டுமான ஸ்ரீமான் C. S. இரத்தினசபாபதி முதலியார் M. L. C அவர்கள் தலைமையின் கீழ் கூடிய மஹா சபை மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

ஆஜர் மெம்பர்கள்,

ஸ்ரீமான்கள் C S இரத்தினசபாபதி முதலியார், A G லட்சுமிநாராயணசாமி நாயக்கர் S பிமையா செட்டியார், V அருணாசலம் செட்டியார், C V சுப்பைய செட்டியார், V பழனிசாமி நாயுடு, M பரமேஸ்வரம் செட்டியார், V லட்சுமிநரசிம்மலு நாயுடு, C V செல்வராஜுலு நாயுடு, டாக்டர் C V N நாயுடு, P சுப்பிரமணிய பிள்ளை, A நஞ்சப்ப செட்டியார் B A B L., A கிருஷ்ணசாமி செட்டியார் B A., பாலசுந்தரம் பிள்ளை C S கந்தசாமிக் கவுண்டர், கோவிந்தசாமி பிள்ளை, M துரைசாமி ஆச்சாரியார், S A கணேசன், A R சிவானந்தம், M வேலப்ப செட்டியார், B பக்திரப்ப செட்டியார், N சாமிநாயுடு, C N சுடலைமுத்து பிள்ளை ஸ்ரீனிவாசலு நாயுடு, இன்னும் ஸ்ரீமான் E V ராமசாமி நாயக்கரவர்களும் மற்றும் பல கனவான்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவன

தீர்மானம் 1

மதுரைமஹாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களை தமிழ் நாட்டில் நிறைவேற்றி வைக்க இந்த ஜில்லாவில் ஜில்லா மஹாநாடு ஒன்று கூடிய சீக்கிரத்தில் கூட்டிவைக்கவும் பொது பிரசார வேலைக்காக தொகைவசூலிக்கவும். அடியிற்கண்ட கனவான்களடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தீர்மானம் 2

ஷை கமிட்டிக்கு அந்தந்த தாலூகாக்களில் இன்னும் தேவையான மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தீர்மானம் 3

சென்னையில் அடுத்த 23-1-27 தேதியில் கூடப்போகும் மாகாண நிர்வாக சபைக் கூட்டத்தில் தமிழ் நாட்டில் மதுரை மஹாநாட்டுத்தீர்மானங்களை நிறைவேற்றிவைப்பதற்காகப் பொருளுதவியும் மற்றும் வேண்டிய சாதகங்களையும் செய்துகொடுக்கவேண்டுமாய் ஷை நிர்வாக சபையாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமாய்த் தீர்மானிக்கப்பட்டதுடன் தமிழ் நாட்டில் நடக்கவேண்டிய வேலைகளுக்காக இந்த ஜில்லாவிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் தமிழ் நாட்டுப்பிரசாரக்கமிட்டிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் ஷை தொகையை 1வது தீர்மானத்திற்கண்ட கமிட்டியார்களே வசூலிக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம் 4

ஜில்லா அமைப்பு ஆரம்பச் செலவுக்காக வேண்டி, ஜில்லா மஹாநாடு சம்பந்தமான பிரசார வேலைக்காகவும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் பண்டிலிருந்து ரூபாய் 250 திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் பொறுப்பில் செலவிடக் கொடுத்து உடனே வேலை துவக்க அனுமதி கொடுக்கவேண்டுமென்பதாகத் தீர்மானிக்கப்பட்டது

தீர்மானம் 5

ஷை கமிட்டிக்கு திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களை பிரசிடெண்டாகவும் திருவாளர் V பழனிச்சாமி நாயுடு, C V சுப்பைய செட்டியார் ஆகிய இருகனவான்களையும் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தீர்மானம் 6

அந்தந்த தாலூகாக்களில் பணவசூல் செய்யவும் அங்கத்தினர்களைச் சேர்க்கவும் பிரசாரம் செய்விக்கவும், அடியிற்கண்ட கனவான்களை போஷகர்களாகவும், கமிட்டி கனவான்களாகவும் முறையே தெரிந்தெடுத்துக் கட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

போஷகர்கள்

மகா-ள-ள-ஸ்ரீ திவான்பஹதூர் முத்தைய ராமலிங்கக்காளிங்கராயர், திவான் பஹதூர் P சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், ராவ் பகதூர் நல்லதம்பிச்சர்க்கரை மன்றாடியாரவர்கள் பழயகோட்டை, ராவ் பகதூர் T A ராமலிங்கம் செட்டியார் B A B L அவர்கள் ராவ்பஹதூர் C S இரத்தினசபாபதி முதலியாரவர்கள், V C வெள்ளியங்கிரிக்கவுண்டரவர்கள், வேணுடையாக் கவுண்டரவர்கள் M L C சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர், இம்முடிக் தமாரகாங்கயமன்றாடியாரவர்கள் காடையூர் பட்டக்காரர், மும்முடிக் கோன் கணபதிப்பல்லவராயரவர்கள் பட்டக்காரர் காங்கயம், ராவ்பஹதூர் M G ஆரோக்கியசாமி பிள்ளையவர்கள், குமார ஜமீன்தாரவர்கள் ஊற்றுக்குழி, சமுத்தூர் ஜமீன்தாரவர்கள், M சம்பந்த முதலியார் B A B L, K M சின்னரங்கய கவுண்டர் அவர்கள். V வெரிவாட செட்டியார் அவர்கள், கான் சாஹிபு குலாமுசேன் சாயபு அவர்கள்,

கமிட்டிமெம்பர்கள்

கோயமுத்தூர் தாலூகா

திருவாளர் M ராமசாமி கவுண்டரவர்கள் கணபதி, நஞ்சப்பகவுண்டரவர்கள் கிரணம்; வெள்ளியங்கிரிக்கவுண்டரவர்கள் நீனம்பாளையம், திப்பண்ண கவுண்டர் அவர்கள், பெரியசாமிக் கவுண்டர் அவர்கள் தெனமகல்லூர், நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் செட்டிபாளையம். கிருஷ்ணசாமிக் கவுண்டர் அவர்கள் செட்டிபாளையம், வெங்கிடசாமி செட்டியார் அவர்கள் செட்டிபாளையம், குருந்தாசலக் கவுண்டர் அவர்கள் வெள்ளக்கிணறு, R V லட்சுமைய நாயுடு அவர்கள் உப்பிலிபாளையம், P S G வெங்கிடசாமி நாயுடு அவர்கள் பீளமேடு, வேணுகோபால் நாயுடு அவர்கள் பீளமேடு, A G குருசாமி நாயுடு அவர்கள் ராதாகிருஷ்ண மில், ராமகிருஷ்ண நாயுடு அவர்கள் அத்திபாளையம், S N ரங்கசாமி நாயுடு அவர்கள், S சின்னையா அவர்கள், S N பொன்னையன் கவுண்டர் அவர்கள், B நஞ்சுண்ட கவுண்டர் அவர்கள். M ரங்கைய கவுண்டர் அவர்கள், T S சிவசுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் B A, வி. கோவிந்தசாமி நாயுடு அவர்கள்,

திருவாளர் R K வெங்கிடாசலம் செட்டியாரவர்கள், புருஷோத்தம நாயுடு அவர்கள், T கிருஷ்ண செட்டியார் அவர்கள், V S செங்கோட்டையா முதலியார் அவர்கள், S பாலகிருஷ்ண பிள்ளையவர்கள், K சுப்பன் B A B L அவர்கள், K G கோபால் பிள்ளையவர்கள். A T லட்சுமணசாமி முதலியார் அவர்கள், S பிமைய செட்டியார் அவர்கள், C K கிருஷ்ண போபன் அவர்கள், சின்னதுரை ரங்கராசலம் பண்ணாடி அவர்கள் P கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள்.

தாராபுரம் தாலூகா.

திருவாளர்கள் K S சுப்பிரமணிய கவுண்டரவர்கள, பட்டக்கார் குட்டப்பாளையம், முத்துக்காங்கய கவுண்டர் அவர்கள் கவுண்டம்பாளையம், K சுப்வாயாக் கவுண்டர் அவர்கள் முள்ளமபாளையம், V R முத்துசாமிக் கவுண்டர் அவர்கள் காட்டுப்பாளையம், V கோவிந்தசாமிக் கவுண்டர் அவர்கள் கல்லாங்காட்டுப்புதூர், அப்துல்கரீம் சாயபு அவர்கள் தாராபுரம், அப்பாய் நாயுடு அவர்கள் தாராபுரம், மாரியப்பத தேவர் அவர்கள் அலங்கியம், K சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சிவன்மலை, N M நடேச முதலியார் அவர்கள் காங்கயம், தங்கமுத்து முதலியாரவர்கள் வெள்ளகோவில்.

கொள்ளேகாலம் தாலூகா.

திருவாளர் A B C செட்டியார் அவர்கள், G P மல்லப்பா அவர்கள், சிக்கு கெமபே கவுண்டர் அவர்கள் புட்டுசாமையா அவர்கள்.

உடுமலைபேட்டை தாலூகா.

திருவாளர்கள மல்லயாண்டி செட்டியாரவர்கள், செல்லமுத்துக் கவுண்டரவர்கள், சையத்காஜா மொய்தீன் சாயபு அவர்கள், சிவசுப்பிரமணிய கவுண்டரவர்கள், குருமூர்த்தி நாயுடு அவர்கள், சதாசிவம்பிள்ளையவர்கள், வீராசாமி பிள்ளையவர்கள், G V குருசாமி நாயுடு அவர்கள், குருசாமி நாயுடு அவர்கள், பெதப்பம் பட்டி. R N சுப்பராய கவுண்டரவர்கள், சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பெரியண கவுண்டர் அவர்கள் எரிசினம்பட்டி, த. நாராயணசாமி நாயக்கரவர்கள் கள்ளிப்பாளையம், M S T இரங்கசாமிக் கவுண்டரவர்கள் உடுமலைப்பேட்டை, P இராமசாமி நாடார் ஷை யூர், லட்சுமண கவுண்டர் ஷை யூர், வெங்கிடசாமி நாயக்கர் கோமங்கலம் புதூர், R சாமண்ணு நாயக்கர் ஷை யூர், கி. சுப்பராயலு நாயக்கர் ஷை யூர், R S மயில்சாமி நாயுடு ஷை யூர், நாருமுத்து நாயக்கர் ஷை யூர்.

பவானி தாலூகா.

திருவாளர் A N ராஜாக் கவுண்டர் அவர்கள், K S பொன்னுசாமிக் கவுண்டரவர்கள் குறிச்சி, முத்துசாமிக் பிள்ளை அவர்கள் கன்னடியபாளையம், வேலாயுதம் பிள்ளை அவர்கள் அந்தியூர், குருநாத செட்டியார் அவர்கள் அந்தியூர், மூர்த்தி செட்டியார் அவர்கள் புகையிலைசெட்டியூர், சர்மலிங்

(இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)

சென்னிமலை
பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கஸ்தாபனம்.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் 16-1-27-ந் தேதி சென்னிமலை செங்குந்தர் ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஆலயபரிபாலனசங்கத்தின் அக்கிராசனபதவிக்கு இவ்வூருக்கு வந்திருந்தபொழுது அன்று இவ்வூர் வாசிகளின் முயற்சியின் பேரில் மேற்படி கோயில் மண்டபத்தில் இரவு 7-30 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ஸ்ரீமான்கள் கே. கிருஷ்ண முதலியார், டி. குருமூர்த்தி செட்டியார், வி. எஸ். முருகேச முதலியார், வி. எஸ். செங்கோட்டையா முதலியார், ஸெ. கே. ராமசாமி முதலியார், மு. பழனியப்ப முதலியார், செ. ராமசாமி முதலியார், ராஜமன்னார் செட்டியார், எஸ். ஆர். மாரியப்ப முதலியார், கே. எஸ். வெங்கடய கவுண்டர், ஈ. ஆர். கந்தசாமிக் கவுண்டர் முதலிய கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான் வி. எஸ். செங்கோட்டைய முதலியார் அவர்கள் வேண்டுகோளின்படி ஸ்ரீமான் நாயக்கரவர்கள் கூட்டத்திற்கு தலைமைவகித்து பார்ப்பனரல்லாதார் சங்கங்கள் அங்கங்கே ஸ்தாபிக்கவேண்டிய அவசியத்தையும் பார்ப்பனீயத்தை ஒழிக்க வேண்டிய அவசியத்தையும் சுமார் ஒரு மணிநேரம் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறினார். அதன்பின்னர் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் ஒன்று ஸ்தாபித்து நடத்த கூட்டத்தினர் எல்லோரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டு ஒரு தீர்மானம் செய்தார்கள். பிறகு சங்கத்திற்கு இதனடியிற்கண்ட கனவான்கள் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்களாக கூட்டத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மதுரையில் நடந்த பிராமணரல்லாதார் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர நிர்வாக கமிட்டியார் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை ஸ்ரீமான் நாயக்கரவர்கள் சிறிது நேரம் எடுத்துச்சொன்னார்.

சங்கத்தின் அங்கத்தினர்கள்.

ஸ்ரீமான்கள் வா. செ. முருகேச முதலியார், (பிரசிடெண்டு) ஈ. ஆர். கந்தசாமிக் கவுண்டர், (வைஸ் பிரசிடெண்டு) மு. பழனியப்ப முதலியார், (காரியதரிசி) செ. ராமசாமி முதலியார், (உபகாரியதரிசி) ஒ. கொ. சென்னியப்ப முதலியார், (கஜான்ஜி.)

டைரெக்டர்கள்.

ஸ்ரீமான்கள் ஒ. அ. ஆறுமுக முதலியார், மெ. செ. கிருஷ்ண முதலியார்; ப. முத்துசாமி முதலியார், S. R. மாரியப்ப முதலியார், ப. க. குப்புசாமி முதலியார், ஜி. செ. ராஜமன்னார் செட்டியார்.

நிதிகளைத் தயாரிக்கவும் மெம்பர்களைச் சேர்க்கவும் அடியிற் கண்ட கனவான்கள் கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்ரீமான்கள் வா செ. முருகேச முதலியார், மு. பழனியப்ப முதலியார், செ. ராமசாமி முதலியார், ஜி. செ. ராஜமன்னார் செட்டியார்.

கடைசியாக வைஸ் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் ஈ. ஆர். கந்தசாமிக்கவுண்டர் அவர்கள் எழுந்து அடுத்தாப்போல் தமது தமையனார் வீட்டில் நடைபெறும் கலியாணத்தில் பார்ப்பனீயத்தை ஒழிக்கப்பிரயத்தனப்படுவதாகவும் ஒரு சமயம் மணம் சீக்கிரம் நடைபெறுவதால் தமது முயற்சி பலிக்காவிட்டாலும் தன் வீட்டில் நடைபெறும் வைபவங்களில் பார்ப்பனீயத்தை ஒழிப்பதாக ஒப்புக்கொண்டார். கடைசியாக ஸ்ரீமான் வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் எல்லோருக்கும் வந்தனம் கூற கூட்டம் முடிவடைந்தது.

பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் தருமபுரி.

தருமபுரி "சரஸ்வதி விலாஸ" மாளிகையில் 17-1-27-ந் தேதி மாலை 6 மணிக்கு மகா-ள-ஸ்ரீ டி. எம். துரைசாமி நாயுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற தர்மபுரி பார்ப்பனரல்லாதார் பொதுக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் கிளை ஒன்று தர்மபுரியில் ஸ்தாபிக்கப்பட்டது. முப்பது பெயர்களுக்கு அதிகமாகவே அதே இடத்தில் அங்கத்தினர்கள் ஆனார்கள் இனியும் சேருவார்கள். சென்னையின் மத்திய சங்கத்தின் விதிகள் இந்த கிளைக்கு பொருந்தும் சில மாறுதல்களுடன் அங்கீகரிக்கப் பெற்றது. அடியில் கண்ட கனவான்கள் நிர்வாகஸ்தர்களாக தெரிந்தெடுக்கப்பெற்றார்கள்.

1. மகா-ள-ஸ்ரீ டி. எம். துரைசாமி நாயுடு அவர்கள் (அக்கிராசனாதிபதி).
2. மகா-ள-ஸ்ரீ டி. எச். சித்தவீரப்பசெட்டியார் அவர்கள், எஸ் ஆர். சாமலிங்கம் பிள்ளை அவர்கள், (உப அக்கிராசனாதிபதி)
3. மகா-ள-ஸ்ரீ வி. எஸ். கஞ்சமலை செட்டியார் அவர்கள், (பொது காரியதரிசி).
4. மகா-ள-ஸ்ரீ டி. ஈ. குருநாத செட்டியார் அவர்கள், டி. எ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், (உதவிக் காரியதரிசிகள்).
5. மகா-ள-ஸ்ரீ டி. எம். நடேச செட்டியார் அவர்கள், (பொக்கிஷதார்).
6. ஜனாப் கே. அப்துல் அமீர் சாயபு, வகாப் சாயபு, ஸ்ரீ டி. எம். ராஜரத்தினம் செட்டியார், டி. பி. நடேச செட்டியார், நா. தேவராஜன், பார்த்தசாரதி முதலியார், பி. பொன்னுசாமி பிள்ளை, சுப்பா நாயுடு, டி. என். வரதராஜுலு நாயுடு, டி. கே. கேசவலு நாயுடு இவர்கள் (கமிட்டி அங்கத்தினர்கள்).

மகா-ள-ஸ்ரீ டி. எச். சித்தவீரப்பசெட்டியார், நா. தேவராஜ, பி. வி. நாராயணசாமி செட்டியார், வகாப் சாயபு ஆகியவர்கள் "வாலிபச்சங்கத்தின் நோக்கமும் வேலையும்" என்பதைப் பொருளாகக்கொண்டு பேசினார்கள். அக்கிராசனர் அவர்கள் தமது முடிவுரையில் எல்லோரும் இன்னும் அதிக அங்கத்தினர்களைச் சேர்த்து சங்க நோக்கத்தைநிறைவேற்றுதற்கு தீவிரமாக உழைக்குமாறு வற்புறுத்தினார்கள். மகா-ள-ஸ்ரீ கஞ்சமலை செட்டியார் வந்தனோபசாரம் சொல்லியவுடன் கூட்டம் கலைந்தது.

டிடெக்டாஸ் அல்லது துப்பறியும் (ரகசியம்) கருவி.

இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்துகொள்ளலாம். மேனாட்டார் கண்டுபிடித்த கருவி இது. பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்".

பாரீஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

காதலர்காள்! காதல் ரசம்! முந்துங்கள்!

ராஜ ராஜம்

இன்பரசம்! அன்புமயம் ஆய்விட்டது.

அல்லது

காதலின் வெற்றி.

இதில் இளம் காதலர்களின் அந்தரங்கக்காதலின் பெருமையும் சிறுமையும் ரகசியக் கடிதங்களின் தன்மையும் மற்றும் தற்கால உலக அந்தரங்க பல ரகசியங்களும், மற்றும் காதலர்களின், பல அரியமர்மங்களும், இன்பமும் நன்மையும் ஊட்டும் இன்ப ஊற்றாகவே சிறந்து விளங்கும். இச் சிறிய அழகிய நூலின் விலை அணா 6 தான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒன்று பெறலாம்.

கொக்கோக கோலம் பல உருவப்படங்களுடன்	...	2—4—0
ஜீவ வசிய பரம ரகஸ்யம் (மாரீட வசியம்)	...	3—0—0
மஹேந்திர ஜாலம்	...	0—12—0
பண்டிதை மெஸ்மரிஸா	...	1—8—0
இங்கிலீஷ் சம்பாஷணை புத்தகம்	...	2—0—0

N. B.—மற்றும் எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்கும். வெளிநாட்டிலுள்ளோர் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஏ. என். ராஜா & கோ, (2) ராயபுரம், மதராஸ்.

உண்மை விளக்கம்

முன்னுரை.

(சிவசம்பு சாமியார் எழுதுவது)

அகத்தும் புறத்தும் இடையீடின்றி முறையே தூய வெண்ணங்களும், தூய செய்கைகளும் என்றும் தொடர்புடையவாய் உறுதி பயக்கும் உயரிய இயற்கையின்ப நலந்திகழ் உள்ள முடையார்க்கே தோன்றுவது உண்மை விளக்கம். அது உயிர்த்தொகுதிகளுள் மிக்க மாண்புடைய மக்கட் பகுதியினும் அவ்வவ்வினத்தின் தகுதிக்கேற்ப நிறைந்தோ குறைந்தோ நிகழும் நிகழ்ச்சி முறையால் உயர்வு தாழ்வுகள் தோன்றுமெனினும் இன்ப நுகர்ச்சிக்கண் அவரவர் அறிவைப்பொறுத்தே உணர்ச்சியும் உதிக்கும். உணர்ச்சியைக்கொண்டே ஒவ்வொருவருடைய நிலைமையையும் தெரிந்துகொள்ளக்கூடும். உணர்ச்சியில்லர்மல்மிக்க அறிவும் தக்க ஆற்றலும் ஒருவர் மாட்டுத் தொக்கு நின்றாலும் ஒவ்வோர் சமயம் பிறர்க்குரையாடும் பெற்றியேயாகும். தன்னுணர்வு தலைப்பட்ட காலத்தேமலைவிலா ஊக்கமும், மாணற நோக்கமும், மக்கட்பகுதியினர்பால் ஒத்த விருப்பும், சித்தங்கலங்காத தீரமும் சிறப்புற நடைபெறும். "கற்றும் என்பலன்? கற்றிடும் நூன் முறை சொற்ற சொற்கள் சுகாரம்பமோ? நெறி நிற்றல் வேண்டும்." நிற்றலே நேரிய சீரிய உணர்ச்சியாகும். அவ்வுணர்ச்சிதான் அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அவ்வப்போது அவ்வவ்வுயிர்க்குவேண்டும் உதவியை விரும்பிச்செய்து மிக்க மகிழ்ச்சியை மேவும் ஒற்றுமையியக்கமே அதற்குரிய உறுதுணையாகும். வேற்றுமை மயக்கத்தைமேவாது, மேவாது. பண்டைப் பெரியோராகிய நம்மவர்-மூதாதையர் கண்டநெறி, விண்டகுறி. அந்நெறி பிழைத்தோம், குறியிற்றவறினோம், கோலம் இழந்தோம், சீலம் துறந்தோம்! சிறுமையை-வறுமையை சேர்க்கையாலடைந்தோம், தீவினைச் சேற்றிலே படிந்தோம். முடிந்தது நம்மவர்கதி அடிமை வாழ்க்கையால் அந்தோ! வேற்றுமை மயக்கத்தில் விளைந்த தீமையை விள்ளவும் ஒண்ணுமோ?

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரும் நோய்" என்னும் உத்தரவேத சத்திய மந்திரத்தை உற்றுற்று நோக்கி உணருந்தோறும் உணருந்தோறும் உண்மை விளக்கம் ஓங்கி மிளிரும். சிறிய செய்திமுதல் மிகப்பெரிய செய்திகாறும் இவ்வருமைத் திருக்குறள் பயன்கொடுத்துதவும். சார்புணர்தலாவது தத்தம் தகுதியையும், ஆற்றலையும், அறிவையும் உள்ளுறத்தெரிந்து அந்நிலையினின்றுமே பிறழாமல் அயர்ச்சியின்றிய அன்பின் வழி நிற்றலேயாம். "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர் புன்கணீர்பூசல் தரும்." உண்மை உணர்ந்த பெரியார் கடவுளைக் குறித்துக் கழறும்போது "அன்பே" "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்று நீள நினைந்து நெக்கு நெக்குருகிப் பேசியிருக்கின்றனர். அவ்வன்பு வளர்ச்சிபெறு முறையிலே தன்னுடல்மட்டிலே நின்று மேலேறிச்சென்று தந்தை, தாயர், மனைவி, மக்கள் உற்றார், உறவினர், ஊரார், நாட்டார், உலகத்தார் எனப் பரவிச் சென்று விரவி நின்று முடிவிலே இறைவனருளிலே இரண்டறக் கலந்து போகும். இதுதான் உண்மைச்சமயத்தின்-உணர்ந்த மாமுனிவரின்-பொருட்செல்வரின் முடிவான கொள்கை. இதில் வேற்றுமை மயக்கம் சிறிதும் விரவாது ஒற்றுமையியக்கமே பற்றுக்கோடாக நின்று நித்தலும் பிறங்கும். அதினின்றும் இன்பமே மக்களின் முக்கிய நோக்கம். அதை மாறுபடுத்தி நமக்குள் கூறுபாடுகளைக் கொண்டு புகுத்தி, குற்றங்காணும் கொள்கைகளை மிகுதிப்படுத்தி, குணமென்னும் தகுதியைக் குலைத்து மலைக்கச் செய்தது "ஆரியக் கூத்து" "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேலே கண்ணாயிருத்தல் வேண்டும்" சிறிது தவறினாலும் தீங்கே முன்னின்றுநம்மைப் பிடித்தாட்டும் இடங்கொடுத்தால் ஏராளமான துன்பத் தொகுதியே தொடர்ந்து பற்றும். நமது தற்கால நிலைமை முற்றும் அறவேயாகும்.

ஆரியக் கூத்தரின் பூரியக் கூத்தினின்றும் அளவுபடாது எழுந்து தோன்றி அருந்தமிழ் நாட்டை அலைக்கணுறச்செய்த வேற்றுமை மயக்கத்தைக் கண்டு மனம் புழுங்கிப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே திருநாவுக்கரசு நாயனார் "சாத்திரம் பல பேசுஞ்சழக்கர்காள் கோத்திரமுங் குலமுங் கொண்டு என்செய்வீர், பாத்திரம் சிவம் என்று பணிதிரேல் மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதைச் சிந்தித்தறிதல் நம்மவர் கடன். இறைவன் திருவடியை எண்ணாது ஈனத்தொழில் செய்பவர் தங்களை மிக்குயர்ந்த விழுக்குலத்தவரென்று வீறுபடப் பேசினும் அவர்கள் நல்லோரால் கழித்தொதுக்கத்தக்க இழிகுலத்தவரே யாவரென்றும், "அருட்கடவுளின் ஆணைவழிச்செல்லும் அன்பர்கள் ஆவிறைச்சி தின்றுழலும் புலையரே எனினும் அவர்கள் பல்லோராலும் பணிந்தேத்த தக்க தெய்வீக மனிதரேயாவர்" என்றும் உள்ளதை உள்ளபடியே உரைத்தருளியிருக்கின்றார் அந்நாயனார். அவரோடு "அப்பூதியடிகள்" கலந்துறவாடிய பின்னர் நிகழ்ந்தசெய்தியை ஆராயின் வேற்றுமை மயக்கத்துக்குச் சிறிதும் இடங்காணமுடியாது. கலந்த அன்புக்கு இலக்கணமே காணமுடியும். தீண்டாமை, நெருங்காமை, பாராமை முதலியவெல்லாம் பறந்தோடிவிட்ட பான்மையைப் பார்க்கக்காணலாம். "புத்த முனிவரும்" உள்ளம் பொறாராய் வேற்றுமை மயக்கத்தை வேரோடுகளைந்து வெந்நீறுற்ற ஒற்றுமைக் கொள்கையை உதிப்பித்தனர். அவ்வாறு பெரியாரெல்லாம் அருநெறியை வகுத்துக் காட்டாதிருந்தால் பார்ப்பனர் வேற்றுமைப் படுகுழியில் நம்மவரனைவரும் வீழ்ந்தாழ்ந்து மண்ணோடு மண்ணாய்ப் போயிருப்பார். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டு ஒழுகலான்" உள்ளொன்று வைத்துப் புறம்போன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" "கனவினும் இன்னாதுமன்னோ வினைவேறு, சொல்வேறு பட்டார் தொடர்பு" ஆசைகாட்டி மோசஞ்செய்யும் வஞ்சநெஞ்சினர் மாயவலையிற் சிக்கி வறிதேமாளாது குறிப்பினின்று கோதுமாற்றி மதிப்பைப் பேணிவாழ்வதன்றே சதுர்படும் வாழ்வாகும். அதையே தெருள் வாழ்வு என்று சிறப்புறக்கூறலாம். மானம்போனபின்னர் உயிர்காவலா? இருந்தென்? போயென்? திருந்திய வாழ்வின் திறந்தெரிந்து நிலையிற்றிரியாது நேர்பட வாழ்தலே அருள் வாழ்வு என்று ஆன்றோர் கூறுவர். "நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல்" தன் வீடு காக்கத் தகுதியில்லாதவன் ஊர்க்காவலனாகான். ஆண்மை (ஆள்மை) எல்லார்க்கும் அவசியமிருத்தல் வேண்டும் ஆண்மையுடையவனே அனைத்துக்கும் உரியனாவன்; பேடிகளிடத்தே பித்தலாட்டம் மலிந்துகிடக்கும்; அவர்களுறவை அறவே அகற்றல் அறிஞர்க்கழகு. "அழகலாதன செயேல்" என்னும் அரிய சிறிய வாக்கைப் பெரிதாகப் பேணிப் "பீடுபெற" நிற்றல் வேண்டும்.

பழமை வழியைப் பராக்கறப் பற்றலே பண்புடைமையாகும். மக்கட்பண்பினிலே வழிபாடும் ஓர் பகுதியாகும். அகம் புறம் என்னும் வேற்றுமையாலே வழிபாடு இரண்டுவகைப்படும். அகவழிபாடு மிக்கவலியுடையது, ஆதாரமானது. புறவழிபாடு அதைப் பற்றி நின்றே பயனுதவும். எனினும் இரண்டுக்கும் இன்றியமையாத் தொடர்புண்டு. உணர்ச்சிவாயிலாகவே அதைக் கண்டு கொள்ளல் கூடும். வழிபாடாவது தொண்டாற்றலே. அத்தொண்டு பல திறப்படும்; நாட்டுத்தொண்டு அவற்றுள் ஒன்று. அத்தொண்டினிடத்து அநேக உட்பிரிவுகளும் உள. எவ்வாற்றானும் எல்லாம் இன்பகாரணமாகவே நிகழும் தத்தம் நலத்தையே கருதும் தறுகணாளரான்றோ நம்மவர் தாழ்ந்த வாழ்விலே தத்தளிக்க நேர்ந்திருக்கின்றது. நமதாண்மையுரிமையை அடைய முயற்சிப்பதில் சற்றும் பின்னிடல் ஆகாது. பின்னிடின் பிழைபட்டுப் பேதுற்றுப் போக வேண்டியிருக்கும். அது ஆண்மைக்குணமல்லவே "விரதமே பரமாக வேதியரும் சரதமாகச் சாத்திரங்காட்டினர்" அறிவுப்பகுதியிலிருந்து அறியாமைப்பகுதிக்கும், உறுதிப்பகுதியிலிருந்துஐயப்பகுதிக்கும் நம்மவரைப் பையப்பைய இழித்து நையவைத்துவிட்டனர். அதைப்பெரும்பாலர் அறிந்துகொண்டனர்திருந்திவரவும் சிந்திக்கின்றனர். பழக்கவாதனை ஈர்த்தீர்த்து அறிவைத்தூர்த்து விடப்பார்க்கின்றது. எனினும் விழித்தவரைத் தூங்கவிடாது வீரரின் வெற்றி முழக்கம் பாழ்படுத்தும். பழக்கத்தைப் பஞ்செனநொய்தாக்கிச் சூறைக்காற்றிலே தூற்றிவிடவேண்டும். தொப்பைக்கட்டையைச் சிறுதுகளாக்கிச் சீரிய அறிவெனுந் திக்கிரையாக்கி ஆரியப்புத்தகப்பேயை ஆழ்கடலுக்கும் அப்பாலே போமாறு அடித்துத்துரத்தி நன்னெறியாகிய நம்பண்டைப் பெருநெறியிலே பாங்குபெறச் செல்வோமாக. சிராத்தத்தைப் பணங்கொடுத்து வாங்குபவருமுண்டோ? பற்காட்டிச் சொற்கேட்டுக் கால்வருடி முன்னோடிப் பின்னடந்து அகத்தை நோக்காது முகதனைமட்டும் நோக்கி ஆரியக்காவலராய், வீறியப்பேரினராய் ஓடியலையும் போக்குவரத்துப் புலிகளை-புன்மதிக் கொழுந்துகளைப்பற்றித் தற்காலம் கவலை

படவே வேண்டுவதில்லை. ஊக்கமுடையாரே ஆக்கம்பெறுவர். "ஒட்டார் பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று" ஒற்றுமையியக்க உண்மைவழியிலே சென்று வேற்றுமை மயக்கத்தை மேவாது விரைவிலே நற்றுறை அடையவேண்டும். "ஆக்கிவினை செய்" நல்வேண்டும். "துன்பமுறவரினும் செய்கதுணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" வேற்றுமைபுணர்ச்சி என்னும் வலையை வீசி ஐயம், திரிபு, அறியாமை ஆகிய குணங்களை உண்டுபண்ணி மால்கொளச்செய்து தாழ்த்திவிட்டனர் தருக்குறளர். இன்பம் பயக்கும் வினைகளென்று துன்பம் தொடரும் தொழில்களிலே தலையிட்டு வேதனை பயக்கும் சூதும் வாதும் துணையாகச் சென்று சுகமிழந்து வழி வழி அடிமைகளாய் சுதந்தரம் சிறிதுமில்லாமல் வாழுமாறு செய்துவிட்டனர். பலபடப்பேசி யென்ன? கடவுள் வழிபாட்டுவினை, (இல், துறவு) அறவினை, அரசியல் வினை, நாட்டியல் வினை ஆகிய வினைகளனைத்திலும் சார்பின் வலியால் வேறுபாட்டையே கண்டோம், காண்கின்றோம், காண்போம்." புத்தியின் மாறுபாட்டுக்குப் பொருத்தமுள்ள துணையாகிய வேறுபாட்டுணர்வை விலக்கித் தொலைத்து, ஒற்றுமையுணர்வைப் பொற்புறும் நற்றுணையாக அன்பின் நெறியிலே சென்று அருட்டுறையிலே தங்கி முன்னோர் முதுமொழிக்கிணங்கி இறையளவேனும் முறைபிறழாது அறிவைப்பெருக்கி ஆரணரினும் வேற்றுவினைகளைச் சுருக்கிவாழ்வதே மெய்வாழ்வு ஆகும். வினைமேவிட அறிவுக்குறைவும் ஆற்றலின்றிய தன்மையும் வளர்ந்துகொண்டே வந்து மக்கட்பண்பைமாய்த்தொழித்துவிடும் உண்மை நெறியிலே திண்மை முறையிலே திகழ்ந்து வந்த மணவினை, பிணவினைகளுமே பொருட்செறிவில்லாத புன்செல்களாகப் போய்விட்டன. குறிப்போந்த எல்லா வினைகளும் எமக்கு இம்மியம் பயன்கோடாத ஏமாற்ற வினைகளாக விளங்குகின்றன. அவ்வினைகளைத் திருத்தியமைப்பதாகப் பற்பலகாலத்துப் பலப்பல சமயவாதிகள் தத்தம் மதங்களை அமைவதாக அரற்றி மலைந்தனர். அதனால் ஏற்பட்ட அல்லல்களுக்கு எல்லையில்லையே, என் செயக்கடவது? இன்னல் தீர்ந்து நம்மவர் பழய பழக்கவழக்கங்களை அரிதின் முயன்று நற்பேறு பெறுவு வாழ்வான் கருதி என் சிற்றறிவுக்கு எட்டியமட்டிலே எழுதத்துணிந்த உண்மை விளக்கத்தின் முன்னுரை முற்றிற்று.

"ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதருஸ்.

பட்டுக்கோட்டை பார்ப்பனரல்லாத சுயமரியாதைச் சங்கத்திற்கு அறிவிப்பு.

எழுமின் சங்கத்தை நாடி உழைமின்
அறிவிற் சிறந்த பெரியோர்களே!
செல்வம் தழைத்த அன்பர்களே!!

சாந்தியின் ஆணையை மீறாதீர்கள்.
கதர் அணிவதை மறவாதீர்கள்.

இந்நகர பார்ப்பனரல்லாத தமிழ் மக்களுக்கு கல்வியிலும், புத்தியிலும் குறைந்த தமிழனாகிய நான் தெரிவிப்பதை அன்போடு ஆதரிப்பீர்களென்று நம்புகிறேன். சென்ற 2.1-27-ல் ஷை சங்கமானது நமது மாபெரும் தலைவர் ஸ்ரீமான் பி. தியாகராஜ செட்டியார் அவர்களின் ஞாபகசின்னமாக ஏற்படுத்தப்பட்ட தியாகராஜவாசகசாலையில் முதன் முதலாக இந்நகரில் செல்வத்தில் மிகுந்தவரும் தாலுகா போர்டு தலைவரும் தேவஸ்தான கமிட்டி மெம்பருமான ஸ்ரீ ஏ. பி. எல். என். வி. நாமமுத்து பிள்ளை அவர்களை போஷகராவும் ஸ்ரீமான் எஸ். வேணுகோபால் நாயுடு அவர்களை தலைவராகவும் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களுக்கென அரும் பாடுபடும் "குடி அரசு" பத்திரிகையை இவ்வூரில் பரவச் செய்ய துணிபு கொண்ட ஸ்ரீமான் கு. பா. கோவிந்த செட்டியார் அவர்களை உபதலைவாரகவும் எந்தக் கட்சிலும் சேராத சுயேச்சை கட்சி என்று சொல்லிக்கொண்டுவந்த ஸ்ரீமான்கள் எ. ரெத்தினசாமி தேவர், வீ. மாணிக்கம் பிள்ளை ஆகிய இவர்களைகாரியதரிசிகளாகவும் காந்தியின் திட்டப்படிகதரை அணியாய்ப் பூண்ட ஸ்ரீமான் ரெத்தினசாமி ஆசாரியை உப காரியதரிசியாகவும் பார்ப்பன மக்களால் நடத்திவரும் பத்திரிகையில் ஈடுபட்டு காங்கிரஸ் மெம்பராய் இருந்த ஸ்ரீமான் எஸ். கே. சிதம்பரஞ் செட்டியார் அவர்களை பொக்கிஷதாராகவும் கொண்டு இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது இவ்வூரின் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களின் நன்மை என்றே கருதவேண்டும். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது ஷை வாசகசாலையானாலும் அன்றுவந்திருந்தவர்கள் கொஞ்சமானாலும் 6-1-27-ல்இவ்வூர்பெரிய கடைத்தெருவில்உள்ள ஸ்ரீ நாடியம்மன் மண்டகப்படியில் மேல் குறிப்பிட்டவர்களும் மற்றுமுள்ள பார்ப்பனரல்லாத வியாபாரிகளும் மிராஸ்தார்களும் ஏராளமாய் வந்து கூடியிருந்தது இவ்வூர் தமிழ் மக்களின் நன்மை என்று கூறலாம். அன்று ஷை கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளுக்கு எழுதி இருப்பதால் அதைப்பற்றி இங்கு கூறவில்லை. ஷை சங்கம் நடவாவிடில் நிறுத்திவிட வேணுமென்ற கெட்ட எண்ணம் கொண்ட இவ்வூர் பார்ப்பனர் பலர் தம்முடைய வாய்ப்பாட்டுக்கு இணங்கிய பி. ராஜகோபால நாயக்கரை காங்கிரஸ் சபை தலைவர் என்று கையெழுத்திட்டு 6-1-27-ல் ஒரு துண்டு பிரசுரம் செய்திருக்கிறார். ஷை பிரசுரத்தில் இதுவரையில் பிராமணதுவேஷம் ஏற்படாத இவ்வூரில் வெளியூரிலிருந்து சிலர் வந்து மேற்படி துவேஷம் உண்டு பண்ணுகிறார்கள் என்று எழுதி இருப்பது விந்தையிலும் விந்தையே. அன்றுர் 6-1-27-ல் நடந்த கூட்டத்திற்கு பார்ப்பனர்கள் சூழ்ச்சியால் போகாவிட்டாலும் மேற்படி கூட்டத்திற்கு வந்திருந்த தமிழ் மக்கள் பேசிக்கொண்டதைக்கூட காங்கிரஸ் சபைத்தலைவர் காதாரக்கேட்டாரோ இல்லையோ தெரியவில்லை. உள்ளூரில்உள்ள பெரியோர்களும், வியாபாரிகளும் சேர்ந்து நடத்திய இச்சங்கத்தைப்பற்றி வீணாக வெளியூரார்மேல் குறை கூறுவது அன்றுர் கூட்டத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள் சூழ்ச்சியோ அறியோம். இருந்தாலும், சென்ற 1925-ம் வருஷத்தில் நடந்த பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர் எலெக்ஷனில் இவருக்கு ஓட்டுக்கொடுத்தவர்கள் தமிழ் மக்களா அல்லது பார்ப்பன மக்களில்ஒருவரேனும்உண்டா என்பதை இவருக்கு ஞாபகமூட்டுகிறோம். நமது சங்கத்திற்குமீண்டுஞாபகம் மூட்டுவது யாதெனில் ஊர் ஒன்று இருந்தால் கட்சி பல இருக்கும்; அதை எல்லாம் நாம் லட்சியம் செய்யாமல் தமிழ் மக்களுக்கென ஆரம்பித்த சங்கத்தை மாதம் இரு முறையோ ஒரு முறையோ அவசியம் கூட்டுவித்து பாமர ஜனங்களுக்கு பார்ப்பனர்களின் சூழ்ச்சியை எடுத்துக்கூறி ஷை சங்கம் மேன்மேலும் விருத்தி அடையும்படியும் ஜில்லாக்களில் கூடும் மகா நாட்டுக்கு இச்சங்கத்திலிருந்து பிரதிநிதிகளை அனுப்பும்படியும் பார்ப்பனரல்லாதவருக்கென அரும் பாடுபட்டுவரும் "குடி அரசு" பத்திரிகையை நம் ஊரில் விருத்தி செய்யும்படிக்கும் நம் தமிழ் மக்களின் முன்னேற்றத்தை கருதி உழைத்துவரும் ஸ்ரீமான் ஆரியா அவர்களையும் வைக்கம் வீரர் அஞ்சா நெஞ்சம்படைத்த சிங்கம் மும்முறை தவச்சாலை சென்ற நம் பெரியோர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களையும் இவ்வூருக்கு சமீபத்தில் வரவழைத்து சங்கத்தின் ஆதரவில் பொது கூட்டம்போட்டு பார்ப்பன சூழ்ச்சியை தெளிவாய் எடுத்துக் கூறும்படிக்கும் இச்சங்கம் நீடூழி நிலைத்து இருக்கும்படிக்கும் எல்லாம் வல்ல இறைவன் திருவடி போற்றுகிறோம்.

குறிப்பு:—

தற்சமயம் இவ்வூரில் சின்னக்கடைத்தெருவில் வாரம் ஒன்றுக்கு 10 பேப்பர் விற்றுவந்தது, தற்சமயம் குறைந்துபோய் விட்டதெனத் தெரிகிறது. அவர் லாபம் என்பதைப்பாராமல் தேகசவுக்கியத்தையும் கருதாமல் பொது நலம் கருதி காப்பி ஒன்றுக்கு அணா 1-க்கு விற்றுவருகிறார். இனியாகிலும் நம் தமிழ் மக்கள் நம் நாடு விருத்தி அடைய வேண்டுமானால் "குடி அரசு" பேப்பரை விருத்தி செய்யுங்கள்.

தமிழன்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்-க்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌககியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.

ஆயிரக்கணக்கான

ஆயிரக்கணக்கான வியாதி யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு, (Ltd.,)

(1924-ஞு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	5,00,000—0—0
வெளியிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு...	ரூ.	73 900—0—0
தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது	ரூ.	50,430—0—0
டிபாசிட்டுகள்	ரூ.	86,346—7—4
Reserve Fund காப்புத் திரவியம்	ரூ.	2706—0—0
நடை முதல் தொகை	ரூ	1 50,275—9—5

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்சட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 [illegible] வட்டி கொடுக்கப்படும்.

பிக்சட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவு—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம். 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசசம் பங்கு 1க்கு 0—8—0 [illegible]) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—[illegible]— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்டெவுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி கெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிட்டரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாசிட்டரானால். ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (ஆ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

சூஸ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்:

எல்லா முக்கிய இடங்களிலும்

கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிப்படுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

இனாம் இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது.

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அநுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது "ஆநந்த குண போதினி."

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜுலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந்துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே என் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

1000 தொழில் முறைகள்.

கூலிக்காரன் தொழில் முறைகளைக் கற்று தன் முயற்சியால் சீமானாயினான்

சர்ப்பத்து, ஐஸ்கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம்பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப்பு, செண்டு, கூந்தல் தைலம், பற்பொடி, தேள் விஷ சஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14 பக்கம் விபரப்புத்தகம் இனாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனாம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினப்பள்ளி.



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலையாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

லைன் கம்பெனி, தஞ்சாவூர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.